# பாட்டாளி சிந்தனை

Volume 24 No. 9

May 2014

சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா

SUCI

தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டியின் மாத இதழ்

விலை ரூ 3


# வரலாற்றுச் சிறப்புமிக்க மே தினம்



"ஒரு நியாயமான நாள் வேலைக்கு ஒரு நியாயமான நாள் ஊதியம்? ஆனால் ஒரு நியாயமான நாள் வேலை என்றால் என்ன, ஒரு நியாயமான நாள் ஊதியம் என்றால் என்ன? எந்த விதிக்கு உட்பட்டு இன்றைக்கு நவீன சமுதாயம் இருக்கின்றது மற்றும் தன்னை அது வளர்த்துக் கொள்கின்றது என்பதை வைத்து அவை எவ்வாறு தீர்மானிக்கப் படுகின்றன. இதற்குப் பதில் தேட தார்மீக மதிப்புகள் அல்லது சட்டம், சமத்துவத்தின் விஞ்ஞானத் தையோ, மனிதநேய பச்சாதாப உணர்வையோ, நீதியையோ அல்லது தருமசிந்தனையையோ கூட நாம் பிரயோகிக்கக்கூடாது. தார்மீகரீதியாக எது நியாயமோ, சட்டத்தின் படி கூட எது நியாயமோ அது சமூக நியாயத்திலிருந்து வெகு தூரம் விலகி இருக்கலாம். சமூக நியாயம் அல்லது அநியாயம் என்பது ஒரே ஒரு விஞ்ஞானத்தால் மட்டுமே தீர்மானிக்கப்படுகிறது. உற்பத்தி மற்றும் விநியோகத்தைப் பற்றிய யதார்த்த விவரங்களைக் கையாளும் (ஆய்வு செய்யும்) விஞ்ஞானமே, அரசியல் பொருளாதார விஞ்ஞானமே அது. ... இயல்பான சூழ்நிலைமைகளில், தான் வசிக்குமிடத்தின் தனது நாட்டின் வாழ்க்கைத் தரத்திற்கேற்ப ஒரு தொழிலாளி வாழ்வதற்கு தேவையான பொருட்களை வாங்கவும், ஒரு தொழிலாளி தனதுடலை உழைக்கத் தக்க ஒழுங்குமுறையில் வைத்திருக்கவும், தனது இனத்தை (சந்ததியை) உருவாக்கி வளர்க்கவும் ஆகும் மொத்த செலவே ஒரு நியாயமான நாள் ஊதியம் என்பதாகும். ...தான் அதே அளவு வேலை செய்ய அடுத்த நாளும் அதற்குப் பின்னரும் வருவதற்கான தனது திறனில் எந்த அளவும் குறைவு ஏற்படாமல் ஒரு தொழிலாளியின் ஒரு நாளின் முழு உழைப்புச் சக்தியும் வேலை செய்யும் ஒரு நாளில் எத்தனை மணி நேரத்திற்குள் கரக்கப்படுகின்றதோ அதையும் எத்தனை தீவிரத்துடன் அதே அளவு வேலை வாங்கப் படுகின்றதோ (அதற்கு ஒரு நாளில் எவ்வளவு நேரம் ஆகின்றதோ) அதுவே 'ஒரு நியாயமான நாள் வேலை' என்பதாகும்.

இனி, கொடுக்கல் வாங்கலை இவ்வாறு விளக்கலாம் தொழிலாளி தனது முழு நாளின் உழைப்புச் சக்தியை முதலாளிக்குக் கொடுக்கின்றார் ... இதற்கு மாற்றாக, தனது இதே பேரத்தை ஒவ்வொரு நாளும் செய்ய இயலுவதைக் காத்துக் கொள்ள தேவையான குறைந்த பட்ச வாழ்க்கைத் தேவைகளுக்கு ஈடாக, அதற்கு மேல் சிறிதுகூட இல்லாமல் மட்டுமே ஒரு தொழிலாளி (ஊதியமாக) பெறுகின்றார். பேரத்தின் தன்மை அனுமதிப்பதற்கு ஒப்ப, தொழிலாளி எவ்வளவு அதிகமாக முடியுமோ அவ்வளவும் முதலாளி அவ்வளவு குறைவாக முடியுமோ அவ்வளவும் கொடுக்கிறார். இது ஒரு விநோதமான நியாயமாகும்.'

**பிரெட்ரிக் எங்கெல்ஸ்**

*ஒரு நியாயமான நாள் வேலைக்கு ஒரு நியாயமான நாள் ஊதியம், மே, 1881*



"நாம் கடுமையாக உழைக்கின்றோம்; எல்லையில்லா செல்வத்தை உருவாக்குகின்றோம் ... பூமியின் வயிற்றிலிருந்து இரும்பையும் நிலக்கரியையும் தோண்டியெடுக்கின்றோம். இயந்திரங்களையும் கப்பல்களையும் கோட்டைகளையும் ரயில் தடங்களையும் நாம் கட்டுகின்றோம். இவ் உலகத்தின் அனைத்து செல்வங்களும் எங்கள் கரங்களால் உருவாக்கப்பட்டன, எங்கள் வியர்வையாலும் ரத்தத்தாலும் பெறப்பட்டன. நமது கடும் உழைப்பிற்காக நாம் என்ன பரிசு பெற்றோம்? நியாயமாகப் பார்த்தால் நாம் நல்ல வீடுகளில் வசிக்க வேண்டும், நல்ல உடைகளை உடுக்க வேண்டும், தினசரி ரொட்டிக்கு எக்காரணம் கொண்டும் ஏங்கக் கூடாது. ஆனால் நாம் பிழைத்திருப்பதற்கு போதுமான அளவு கூட நமது ஊதியம் இருப்பதில்லை என்பதை நாம் அனைவரும் நான்கு அறிவோம். நமது எஜமானர்கள் நமது ஊதியத்தை குறைக்கிறார்கள், ஓவர்டைம் வேலை செய்ய நிர்ப்பந்திக்கிறார்கள், நியாயமில்லாமல் அபராதம் விதிக்கிறார்கள். ஒரே வார்த்தையில் சொல்வதென்றால் ஒவ்வொரு வகையிலும் நம்மை ஒடுக்குகிறார்கள். நாம் அதிருப்தியை வெளிக்காட்டினால் உடனே வேலையிலிருந்து வெளியேற்றுகிறார்கள். நாம் நமது பாதுகாப்பிற்காக யாரை நாடுகிறோமோ அவர்களெல்லாம் நமது எஜமானர்களின் நண்பர்களாகவும் சேவகர்களாகவும் இருப்பதை மீண்டும் மீண்டும் நாம் கண்டு வருகிறோம்., தொழிலாளிகளாகிய நாம் அறியாமையில் வைக்கப் படுகிறோம். நமது சூழ்நிலையை மேம்படுத்த கற்றுக்கொள்ள இயலாத வாறு நமக்கு கல்வி மறுக்கப்படுகிறது. அவர்கள் நம்மை அடிமை சாசனத்தில் கட்டிப் போடுகிறார்கள். அற்பகாரணங்களுக்கெல்லாம் வேலையிலிருந்து நீக்குகிறார்கள். ஒடுக்குமுறையை எதிர்க்க முன்வருபவர்களை கைது செய்கிறார்கள், போராடுவதிலிருந்து தடைசெய்கிறார்கள். அறியாமை மற்றும் அடிமை சாசனம் இவைதான் முதலாளிகளும் அவர்களுக்கு எப்பொழுதும் சேவைசெய்யும் அரசாங்கமும் நம்மை அடிபணியவைக்கச் செய்ய பயன்படுத்தும் சாதனங்களாகும்.

ஒற்றுமையில் தான் நமது வலிமை இருக்கிறது; நம்மை சுரண்டுபவர்களுக்கு சக்திவாய்ந்த எதிர்ப்பை நாம் ஒன்றுபட்டு உறுதியுடன் வழங்குவதில்தான் நமது விமோசனம் இருக்கிறது. ...தோழர்களே! நாம் சக்தியுடனும் முழுமனதுடனும் ஒன்றுபட முயற்சித்துவிடுவோமேயானால், நமது படையை உறுதியான அணியினருடன் சேர்த்துக் கொண்டுவிட்டதனால், இன அல்லது சமூக/மத வேறுபாடு இன்றி அனைத்து நாட்டு தொழிலாளிகளுடன் முழு உலகத்தின் முதலாளிகளுக்கு எதிரான பொதுவான போராட்டத்தில் வெளிப்படையாகவே நம்மால் ஒன்றிணைய முடியும். மேலும், நமது திணவு கொண்ட கை பெருமையுடன் (நிமிர்ந்து) உயரும், இகழ்ச்சியான அடிமைச் சங்கிலி அறுந்து விழும்".

**வி இ லெனின்**

*தொழிலாளர்களின் விடுமுறை மே முதல் நாள்: ஏப்ரல் 1896*

# பல இடர்களையும் தாண்டி புரட்சியாளர்கள் தேர்தல்களில் பங்கேற்பது ஏன்?

## தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்களின் போதனைகளிலிருந்து

மார்க்சிஸ்டுகள் பாராளுமன்றத்திற்குள் செல்வதற்கான காரணம் மக்களிடையே பாராளுமன்ற மாயை இருப்பதாலேயே என்று மார்க்சிச–லெனினிச கருத்தியல் கூறுகிறது. பாராளுமன்ற மாயை என்ற சொற்களின் பொருளென்ன? போலி ஜனநாயகவாதிகள் போலி சோசலிஸ்டுகள் போலி புரட்சியாளர்கள் ஆகியோர் ஜனநாயக சக்திகள் மீதும் புரட்சியின் நேச அணிகளான தொழிலாளர்கள்விவசாயிகள்–மத்திய வர்க்கத்தினர் ஆகியோர் மீதும் இன்னமும் கணிசமான அளவிற்கு செல்வாக்கு செலுத்துகின்றனர் என்பதே யாகும். இவர்கள்தான் இந்த பாராளுமன்ற மாயையை மக்களிடம் பரப்புகிறார்கள். அதாவது நிலைமை மக்கள் புரட்சியை நடத்துமளவிற்கு கனியவில்லை என்பதே இதன் பொருளாகும் வேறு வார்த்தைகளில் சொல்வதானால் பாராளுமன்ற அரசியலிலிருந்து மக்களை விடுவிப்பதற்காக நாம் தேர்தல்களில் பங்கெடுக்கவேண்டிய ஜனநாயக இயக்கம் என்ற கட்டத்தில்தான் நாம் இருக்கிறோம்; எனவே போலி ஜனநாயகவாதிகள் போலி சோசலிஸ்டுகள் போலி புரட்சியாளர்கள் ஆகியோர் தொழிலாளர்கள்–விவசாயிகள்–மத்திய வர்க்கத்தினர் ஆகியோரிடமிருந்து தனிமைப்படுத்தப்படும் வரை... புரட்சிகர

தொடர்ச்சி 2ம் பக்கம்

# பல இடர்களையும் தாண்டி புரட்சியாளர்கள் தேர்தல்களில் பங்கேற்பது ஏன்?

## தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்களின் போதனைகளிலிருந்து



1ம் பக்கத் தொடர்ச்சி

கட்சியின் தலைமையின் கீழ் அரசு அதிகாரத்தை கைப்பற்றக்கூடிய சூழ்நிலைகளை உருவாக்கும் வரை மார்க்சிஸ்ட்–லெனினிஸ்டுகள் தேர்தல் களில் பங்கேற்பர். **(ஐக்கிய முன்னணி அரசாங்கத்தை நடத்துவதில் இடதுசாரி சந்தர்ப்ப வாதத்தின் அபாயம் என்ற படைப்பிலிருந்து. தேர்வு நூல் தொகுதி 4 பக் 329–330)**

உதாரணத்திற்கு தேர்தல் வந்துவிட்டது என்று வைத்துக்கொள்வோம். நாம் இப்போராட்டத்தில் பங்கேற்கவேண்டியுள்ளது. புரட்சி நடந்தேறாத வரை மக்களுக்கு தேர்தல் தேவையோ இல்லையோ மக்கள் தேர்தலை விரும்புகிறார்களோ இல்லையோ அவர்கள் தேர்தலில் இழுக்கப்படுகிறார்கள் தேர்தலில் ஈடுபடுகிறார்கள். புரட்சி என்பது தேர்தல் தேவையில்லை என எப்போது மக்கள் எப்போது புரிந்துணர்ந்துகொள் அதுவே புரட்சியின் கட்ட மாகும். மக்கள் ஒருமித்து அணிதிரண்டு அமைப்பு ரீதியாக தேர்தலை புறக்கணிக்கும்போது ஏற்படுவ தாகும். இப்புறக்கணிப்பை எதிர்மறையாக செய் யாமல் அதிகாரத்தை கைப்பற்றுகிற கட்டத்தை உறுதியாக அடையும்போது புறக்கணித்து இனியும் வேண்டாம் தேர்தல்; அதிகாரத்தை கைப்பற்றுவோம் என்று கூறும்போது நிகழ்வதே புரட்சியாகும். அத்தகைய தருணத்தில்தான் தேர்தல் பயனற்ற தாகவும் தேவையற்றதாகவும் ஆகிறது. அதுவரையில் அவ்வப்போது மக்கள் தேர்தல் வலையில் சிக்குண்டு விடுகிறார்கள். எனவே வெகுஜனங்களோடு கலந் திருப்பதற்காக புரட்சியாளர்கள் புரட்சியாளர் அல்லாதோர் அனைவருமே தேர்தலில் பங்கேற்க வேண்டியுள்ளது. உண்மையான புரட்சியாளர்களும் இதை செய்ய வேண்டும். குறுகிய பிரிவினை மெய்மைவாதம் (sectariantruism) பேசுவோர் மட்டுமே உண்மையிலேயே புரட்சிகர அரசியலை நடை முறைப்படுத்தாதவர் மட்டுமே தேர்தலில் பங்கேற் பதற்கு தயங்கி அதிலிருந்து விலகி நிற்பர். மற்றபடி அனைவருமே தேர்தலில் பங்கேற்பர். ஆனால் அதன் அர்த்தம் தேர்தலில் பங்கேற்போர் அனை வரும் ஒரே மாதிரியான கண்ணோட்டத்தை கொண் டிருக்கிறார்களா? வெளியிலிருந்து பார்க்கையில் அனைவருமே தேர்தலில் பங்கேற்கின்றனர். நான் பங்கேற்கிறேன் மார்க்சிய–லெனினிய புரட்சியாளர் களாகிய நாமும் பங்கேற்கிறோம் சமூக ஜனநாயக வாதிகளும் உண்மையான சக்திகளும் போலி மோஸடி யாளர்களும் பங்கேற்கிறார்கள். முதலாளித்துவ கட்சிகள் போலி சோசலிஸ்டுகள் என அனைவருமே பங்கேற்கிறார்கள். புறத்தோற்றத்தை பார்த்தால் இவர்கள் அனைவருமே ஒன்றுபோலத்தான் தெரி வார்கள்.

அது மட்டுமின்றி தாங்கள்தான் சரியானவர்கள் என்றும் மற்றனைவரும் தவறானவர்கள் என்றும் சொல்வார்கள். எனவே எதிராளி கட்சியை தோற் கடிப்பதற்கு மேற்கொள்ளும் எந்த யுக்திகளும் நடவடிக்கைகளும் நியாயமாக்கப்படுகிறது. ஏனெனில் எனது தரப்பில்தான் நியாயமுள்ளது. இந்த ரீதியில் நீங்கள் வாதம் புரிவீர்களேயானால் கண்ணோட்டத்தை பொறுத்தவரை உங்களுக்கும் முதலாளித்துவவாதிகளுக்கும் எந்த வித்தியாசமும் இருக்க முடியாது. ஆழமான பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்படும்போது உங்களது அணுகுமுறை தவறானது என்பது நிரூபணமாகும். தேர்தல் எனும் போராட்டத்தை நடத்தும் முறை மற்றும் உக்தி முதலாளித்துவவாதிகள் மற்றும் பாட்டாளி வர்க்கம் ஆகிய இரு தரப்பாரும் கைக்கொள்ளும் ஸ்தாபனக்கோட்பாடுகள் தேர்தலைப்பற்றிய அவர் களின் கண்ணோட்டம் மற்றும் வெற்றிக்கான யுக்திகள் அல்லது தோல்வி குறித்த அணுகுமுறை இவையனைத்தையும் புரட்சிகர இயக்கம் அப்போதுள்ள கட்டம் மற்றும் நாட்டு மக்களின் விழிப்புணர்வு மட்டம் ஆகியவற்றைக்கொண்டு தான் தீர்மானிக்கவேண்டும்.

எப்படியாவது அதிகப்படியான எண்ணிக் கையில் வெற்றிபெற்று அதிகாரத்தை கைப்பற்றி விடவேண்டும் என்பதுதான் ஒரு முதலாளித்துவ கட்சியின் பிரதான நோக்கமாகும். அதிகாரத்தை கைப்பற்றிய பிறகு தற்போதுள்ள அமைப்புமுறையை காப்பதற்காக இக்கட்சிகள் சில சீர்திருத்தங்களை மேற்கொண்டு பொய்க் காரணங்களின் அடிப் படையில் சில கோஷங்களை எழுப்புகின்றன. முற்போக்கானவர்கள் என்ற முகத்திரையை அணிவதற்காக எத்தகைய பிரச்சாரத்தை வேண்டு மானாலும் மேற்கொள்வது நடைமுறையில் உள்ள சமூக அமைப்புமுறையை நீடித்திருக்கச் செய் வதற்காக சில காலத்திற்கேனும் மக்களை குழப்பி அவர்களை முட்டாளாக்குவது ஆகியவையே அவர் களின் நோக்கமாகும். ஆகவே எத்தகைய தகிடுதத்தம் செய்தாகிலும் அதிகபட்ச எண்ணிக்கையிலான இடங்களில் வெற்றிபெறுவதே அவர்களின் பிரதான நோக்கமாக அமைந்துவிடுகிறது. இவையன்னியில் அவர்கள் சில அரசியல் திட்டங்களையும் உடனடி கடமைகளுக்கான அஜெண்டாவையும் கூட முன்னிலைப்படுத்துவார்கள். ஆனால் அவர்களின் திட்டங்களும் கோஷங்களும் என்னவாக இருப்பினும் அவர்களின் ஒரே நோக்கம் எப்படியாவது அதிகப் படியான இடங்களில் வெற்றிபெற்று விட வேண்டும் என்பதேயாகும். இதற்கு நேர்மாறாக பாட்டாளி வர்க்கத்தின் கட்சியானது மக்களோடு நிலைத் திருக்க வேண்டும் என்ற கட்டாயத்தால் புரட்சிகர நோக்கத்தில் உறுதியோடு தேர்தல்களில் பங்கேற்கும் போது வெகுஜன புரட்சிகர அரசியல் பாதையின் அடிப்படையில் பங்கேற்கிறது. வெற்றிபெறுவதற்கு தேவையான அத்தனை முயற்சிகளையும் அது மேற் கொள்கிறது. ஆனால் அக்கட்சியுடைய நோக்கத்தின் சாராம்சமாக எப்படியேனும் அதிகப்படியான இடங் களை கைப்பற்றிவிடவேண்டும் என்பதாக ஒருக் காலும் இருக்கமுடியாது. வெகுஜன புரட்சிகர பாதையின் அடிப்படையில் எவ்வாறு தேர்தல்களில் போட்டியிடுவது என்று மக்களுக்கு கல்வி புகட்டுவது தான் தேர்தல்களில் பங்கேற்கும்போது புரட்சிகர கட்சியின் குவிமையமாக இருக்கும். அவ்வாறு கல்வி புகட்டும்போது நம்மால் அதிகப்படியான இடங்களில் வெற்றிபெற முடிந்தால் நல்லது. அவ்வாறு இயலா விட்டால் ஒரு இடத்தில்கூட வெற்றிபெற இயல வில்லை என்றாலும்கூட அப்படியே இருந்துவிட்டு போகட்டும். பத்து இடங்களில்தான் வெற்றிபெற முடிகிறது என்றால் அதுவும் சரிதான். ஆனால் எப்படியேனும் சில இடங்களை கைப்பற்றிவிட வேண்டும் என்பது ஒருக்காலும் மையப்புள்ளி யாகவோ குவிமையப்புள்ளியாகவோ இருக்க முடியாது. **(தொழிலாளர்கள் இயக்கத்தில் ஒற்றுமையை பேணுவதும் புரட்சிகர தலை மையை நிலை நாட்டுவதும் குறித்து. தேர்வு நூல் தொகுதி 4 பக் 540–542)**

உண்மையிலேயே எந்த இயக்கங்களைக் கண்டு அஞ்சுகிறார்களோ அந்த இயக்கங்களை முதலாளித்துவ ஊடகங்கள் விளம்பரப்படுத்துவ தில்லை. அத்தகைய இயக்கங்களைப்பற்றி அவர்கள் பரப்பினால் அது புரட்சிக்கு இட்டுச்செல்லும் என்று அவர்கள் அஞ்சுகிறார்கள். அத்தகைய புரட்சிகர சிந்தனைகளைப்பற்றி அவர்கள் ஒருபோதும் செய்தி வெளியிடுவதில்லை. அத்தகைய தலைவர்களைப் பற்றி அவர்கள் செய்தி பரப்புவதில்லை. என்ன நடக்கிறதோ அதை வைத்து என் வார்த்தைகளை சரிபாருங்கள். எத்தனையோ கட்சிகள் நம்மைக் காட்டிலும் சிறிய அளவில் பேரணிகளை நடத்து கின்றன. ஆனால் ஊடகங்கள் அவற்றுக்கு பெரிய அளவில் செய்தி வெளியிட்டு விளம்பரப்படுத்து கின்றன. அக்கட்சிகள் என்ன சொன்னாலும் அவை வெளியிடப்பட்டு மக்களிடம் எடுத்துச்செல்லப்படு கின்றன. ஆயிரமாயிரம் மக்கள் நமது கூட்டங்களில் திரள்கிறார்கள். ஆனால் செய்தித்தாள்கள் சற்றேனும் அவற்றைப் பற்றி செய்தி வெளியிடுகிறதா? வெளியிடுவதில்லை. வெளியிடுவதற்கு கட்டாயம் ஏற்படும்போது மிகச்சிறிய அளவில் மட்டுமே அவர்கள் செய்தி வெளியிடுவார்கள். நம்மைப்பற்றி செய்தி வெளியிடவேண்டி வந்தால் ஐக்கிய முன்னணிக்குள் நமக்கும் பிற கட்சிகளுக்கும் இடையேயுள்ள சில கருத்துவேறுபாடுகளைப்பற்றி மட்டுமே சில செய்திகளை வெளியிடுவார்கள். அத்தகைய செய்தியைக்கூட ஐக்கிய முன்னணியை உடைப்பதற்காக கட்சிகளை ஒன்றுக்கு எதிராக மற்றொன்றை திருப்பிவிடும் வகையில் செய்தி வெளியிடுவார்கள். எதைக்கண்டு முதலாளித்துவ வாதிகள் அஞ்சுகிறார்களோ அதற்கு எவ்வித விளம்பரமும் அளிக்காமல் வெளியில் தெரியாத வண்ணம் அதை முதலில் மூடி மறைக்கவே முயல் வார்கள் என்பதுதான் மார்க்சிய இயக்கத்தின் வரலாறு நமக்கு காட்டுகிறது. எனவே புரட்சிகர கட்சியானது தன்னைப்பற்றிய பிரச்சாரத்தை தனது சொந்த பலத்தை மட்டுமே கொண்டு எந்த அளவிற்கு முடியுமோ அந்த அளவிற்கு மேற்கொள்கிறது. மக்களிடையே தனது சித்தாந்தத்தை கொண்டு செல்வதற்காக தனது தொண்டர்களை ஈடுபடுத்தி மக்களிடமிருந்து அது நிதி திரட்டுகிறது ஒரு புரட்சிகர கட்சிக்கு எப்போதுமே ஊடகங்களில் விளம்பரம் கிட்டுவதில்லை. ஆனால் எப்போது விளம்பரம் கிடைக்குமெனில் தனது ஸ்தாபன பலத்தாலும் தான் நடத்தும் இயக்கங்களாலும் முதலாளித்துவ ஊடகத்தை எந்த அளவிற்கு நிர்ப்பந்திக்கிறதோ அந்த அளவிற்கு மட்டுமே அதற்கு விளம்பரம் கிடைக்கும். இவ்வியக்கத்தையும் பலத்தையும் முதலாளித்துவவாதிகளும் அவர்களின் ஊடகங் களும் மறுக்கமுடியாது என்ற நிலை ஏற்படும்போது மட்டும் சிறிய அளவில் அதைப்பற்றிய செய்திகள் வெளியிட்டு விளம்பரப்படுத்தும். அப்போதும்கூட எந்த அளவிற்கு அதன் முக்கியத்துவத்தை குறைத்துக் கூற முடியுமோ எந்த அளவிற்கு அதை சிறுமைப் படுத்த முடியுமோ அதை திரித்தும் சிதைத்தும் கூற முடியுமோ அந்த அளவிற்கு செய்து செய்தி வெளியிடுவர். இதுதான் முதலாளித்துவ வர்க்கத்தின் பிற்போக்காளர்களின் செயல்பாட்டு முறையும் செயற்படும் பாங்குமாகும். **(ஐக்கிய முன்னணி அரசியல் மற்றும் கட்சி வேலைகளைப்பற்றி சில அம்சங்கள். தேர்வு நூல் தொகுதி 3 பக் 156–157)**

## என்எல்சி நிறுவனத்தில் தொழிலாளி படுகொலையைக் கண்டித்து எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) அறிக்கை

நெய்வேலி அனல்மின் நிலையத்தின் ஒப்பந்தத் தொழிலாளி படுகொலை செய்யப் பட்டதை கண்டித்து எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டியின் மாநில செயலாளர் தோழர் A ரெங்கசாமி மார்ச் 17, 2014 அன்று வெளியிட்ட அறிக்கை:

என்எல்சி நிறுவனத்தின் சுரங்கம் 1ல் பணிபுரிந்துவந்த திரு ராஜா என்ற ஒப்பந்தத் தொழிலாளி மத்திய தொழில் பாதுகாப்பு படையால் சுட்டுகொல்லப்பட்டதை எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சி வன்மையாக கண்டிக்கிறது. இந்தப் படுகொலையைக் கண்டித்து போராடிய தொழிலாளர்கள் மீது தடியடி மற்றும் கண்ணீர் புகை வீசியதையும் கட்சி வன்மையாக கண்டிக்கிறது.

மறைந்த தொழிலாளி ராஜா அவர்களின் குடும்பத்திற்கு ஆழ்ந்த வருத்தத்தை தெரிவிப்ப தோடு, நிற்கதியாய் நிற்கும் குடும்பத்திற்கு தகுந்த நஷ்டஈடு வழங்க வேண்டுமெனவும் அவரது மனைவிக்கு என்எல்சி நிறுவனத்தில் நிரந்தரப் பணியை வழங்கவும் தடியடியில் படுகாயமடைந் தோர்க்கு சிகிச்சையும் நிவாரணம் வழங்கவும் மத்திய தொழில் பாதுகாப்பு படையினரின் செயல்பாடுகளை நெறிமுறைப்படுத்த வேண்டு மெனவும் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டி கோருகிறது.

# மக்கள் எம் பி – தருண் மண்டல்

**எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் (மேற்குவங்கம், ஜாய் நகர் தொகுதி, 2009–2014) தோழர் தருண் மண்டல் எந்த வகையில் தன்னிகரில்லாதவர் தனித்துவமிக்கவராக திகழ்ந்தார்.**

தேர்தலைப் பொறுத்தமட்டில் பல்வேறு அரசியல் கட்சிகளால் மிகவும் மோசமான கசப்பான வேதனையான அனுபவங்களை இந்நாட்டு மக்கள் அனுபவித்துள்ளனர். தேர்தலுக்கு முன்பு, இந்த அனைத்து கட்சிகளின் வேட்பாளர்கள் எல்லோருமே வாக்காளர்களுக்கு வாக்குறுதிகளை அள்ளி வீசுகின்றனர். தொகுதி முழுவதும் சுற்றி வந்து மக்களுக்குச் சேவை செய்வதற்காகவே உள்ளவர்கள் போல் காட்டிக்கொள்கின்றனர். ஆனால் தேர்தல் முடிந்த உடன், அவர்கள் காணாமல் போய்விடுகின்றனர். பாராளுமன்றத்திலோ அல்லது சட்டமன்றத்திலோ தாங்கள் என்ன செய்கிறோம் என்பதைப் பற்றி வாக்காளர்கள் தெரிந்து கொள்வது அவசியம் என்று இவர்கள் கருதுவதே இல்லை. மீண்டும் தேர்தல் வரும்போது மக்கள் சேவகர்கள் என்ற போர்வையை போர்த்திக்கொண்டு மீண்டும் காட்சி அளிக்கின்றனர், வாக்கு கேட்கின்றனர்.

ஆனால் டாக்டர் தருண் மண்டல், மேற்கு வங்க மாநிலம் ஜாய்நகர் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியைச் சேர்ந்த எம்பி இதற்கெல்லாம் விதிவிலக்கானவர் என்று நிரூபித்துள்ளார். அவர் பங்கேற்க வேண்டிய பாராளுமன்றம் நடைபெறும் நாட்களைத் தவிர மற்ற நாட்களில் ஒவ்வொரு பகுதியாகச் சென்று உழைக்கும் மக்களின் சுக துக்கங்களைப் பகிர்ந்து கொள்வது, அவர்களது கஷ்ட காலங்களில் அவர்களோடு இருப்பது, அவர்களது வாழ்க்கையில் எரியும் பிரச்சினைகள் மீதான கோரிக்கைகளை உயர்த்திப்பிடித்து நியாயமான ஜனநாயக இயக்கங்களை வளர்த்தெடுப்பது பல்வேறு நலத்திட்ட உதவிகள் திட்டங்களை நடத்துவது போன்றவற்றை அவர் எங்ஙனம் மேற்கொள்கிறார் என்பது அத்தொகுதி முழுவதும் பேசக்கூடிய ஒன்றாகிவிட்டது. சொல்லப்போனால், இத்தகைய செயல்களைச் செய்வதற்காகவே அவர் தனது முழு நேரத்தையும் அர்ப்பணிக்கிறார். பல்வேறு மக்கள் கோரிக்கைகளை அவைக்கு உள்ளே ஓங்கி எழுப்புகிறார். பல்வேறு மக்கள்–விரோத மசோதாக்களையும் திட்ட முன்மொழிவுகளையும் விடாப்பிடியாக எதிர்க்கிறார், இப்படி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதியாக மிக முக்கியமான பணியை சிறப்பாக மேற்கொள்கிறார். ஆனால் இதுவரை இருந்துவரும் எம்பிகளின் செயல்படும் பாரம்பரிய சம்பிரதாய முறையினால் இவை எல்லாம் வாக்காளர்களுக்குத் தெரிவதே இல்லை. அதுமட்டுமல்ல, கட்சியின் ஒரே எம்பி ஆக இருக்கக்கூடியவருக்கு அவையில் பேசுவதற்கு நேரம் கிடைப்பது மிகக் குறைவே. ஆனாலும்கூட மக்களின் குரலைப் பிரதிபலிப்பதற்காக அதைச் சரியாகப் பயன்படுத்தினார். பூர்ஷ்வாக்கள்–கட்டுப்பாட்டில் உள்ள ஊடகங்களில் அவர் முற்றிலும் இருட்டடிப்பு செய்யப்பட்டார். அவரைப் பற்றிய செய்தியையே பார்க்க முடியவில்லை; அவர் பேசுவதைக் காட்டுவதை விட்டுவிடுவோம், அவர் பாராளுமன்றத்தில் பேசினார் என்ற குறிப்பு கூட ஊடகங்களில் வெளியிடப்படவில்லை. எனவே தோழர் தருண் மண்டல் பாராளுமன்ற அவைக்குள் என்ன பேசினார் என்பதைத் தெரிந்து கொள்ளும் வாய்ப்பு மக்களுக்குக் கிட்டவில்லை.



டாக்டர்
தருண் மண்டல்

ஆனால், தாங்கள் தேர்ந்தெடுத்த பிரதிநிதி, தோழர் தருண் மண்டல் அவர்கள் பாராளுமன்றத்தில் தனக்குக் கிடைத்த ஒவ்வொரு வாய்ப்பையும் பயன்படுத்தி 75 முறை பேசியுள்ளார் என்பதை அறிந்த வாக்காளர்கள் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றனர். பாராளுமன்ற சூழலுக்கும் அவைக்கும் அவர் முற்றிலும் புதியவர். ஆனாலும் கூட அவர் அங்கே மல்லுக்கட்டினார். அவருடைய மன உறுதியும் விடாப்பிடியான நிலைப்பாடும் அனைவரது கவனத்தையும் ஈர்த்தது. இதற்கு ஜாய்நகரில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட எந்தவொரு எம்பி யும் அவையில் வாய் திறந்ததே இல்லை. ஆனால் முதல் முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பினும் அதோடு கட்சியின் ஒரே எம்பியாக இருந்தபோதிலும் கூட அவர் லட்சக்கணக்கான ஒடுக்கப்பட்ட மற்றும் ஏழை மக்களின் எதிர்ப்புக் குரலை பாராளுமன்றத்தினுள் எழுப்பினார். ஐலா புயலால் சூறையாடப்பட்ட மக்களின் இன்னல்கள், சுந்தர்பான் பகுதிகளைச் சேர்ந்த ஏழைக் கிராம மக்களின் துன்பங்கள், அதோடு அந்தப் பகுதியின் நீண்டகாலப் பிரச்சினையான சரியான ஆறு–அணை இல்லாமை போன்றவற்றை அவையில் அவர் மீண்டும் மீண்டும் சுட்டிக்காட்டினார். உருக்குலைந்துபோன சாலைகளைச் சீரமைப்பதன் அவசியத்தையும், ரயில்களின் எண்ணிக்கை மற்றும் ரயில் சேவைகளை அதிகரிக்கவும், மின்சாரம், தண்ணீர் விநியோகம், தொலைதொடர்பு, சுகாதாரம் போன்றவற்றை மேம்படுத்துவதன் அவசியத்தையும் சம்பந்தப்பட்ட உரிய அதிகாரிகளிடம் வலியுறுத்திவந்தார். விலைவாசி உயர்வு, அதிகரித்து வரும் வேலையின்மை, பெருகிவரும் பெண்கள் மீதான குற்றங்கள், கல்வி மற்றும் சுகாதாரத் துறைகளை வியாபாரமயமாக்கல், கட்டண உயர்வு, அதே போன்று 1 முதல் 8 ஆம் வகுப்பு வரை பாஸ்–பெயில் முறையை நீக்குவதை எதிர்த்தல் போன்ற எரியும் பிரச்சினைகள் பற்றி பாராளுமன்றத்தில் உரத்த குரல் எழுப்பினார். அது மட்டுமல்ல. ஜங்கள்மகால் வனப்பகுதியிலிருந்து கூட்டுப் படையினரை திரும்பப்பெற வலியுறுத்தியும், பர்த்வான் மாவட்டத்தில் உள்ள ஆண்டால் பகுதியில் தனியாருக்குச் சொந்தமாக ஒரு விமான நிலையம் கட்டுவதற்காக வலுக்கட்டாயமாக நிலம் அபகரிப்பதை தடுத்து நிறுத்தவும், உரங்கள் மற்றும் பூச்சிக் கொல்லி மருந்துகளின் விலையைக் குறைப்பதற்காகவும் உழவர்களுக்கு கட்டுபடியான விலை நிர்ணயம் செய்யவும் தொடர்ந்து பாராளுமன்றத்தில் குரலெழுப்பினார். அமைப்பு சாரா தொழிலாளர்களின் பல்வேறு கோரிக்கைகளை அவர் பாராளுமன்றத்தில் எழுப்பினார். அவருடைய தொகுதியில் வறுமை–பீடித்துள்ள பழங்குடியினர், பட்டியலினத்தவர் (தாழ்த்தப்பட்டவர்கள்), சிறுபான்மையினர் ஏராளமானோர் இருப்பதால், அவர்களுடைய வளர்ச்சிக்காக சிறப்புப் பொருளாதார ஊக்குவிப்பு நிதி உதவியை வழங்கும்படி மீண்டும் மீண்டும் அவர் வலியுறுத்தினார்.

டாக்டர் தருண் மண்டல் அவர்களின் உரைகளில் ஊடுருவிப்பார்க்கவல்ல தர்க்கரீதியான காரணங்கள் இருந்தன. அப்படிப்பட்ட அவரது பேச்சுக்கள் மேற்கு வங்கத்தை சேர்ந்த நபர்களை மட்டுமல்லாது மற்ற மாநிலங்களைச் சேர்ந்தவர்களின் கவனத்தையும் ஈர்த்தது. பன்மொழி பேசக்கூடியவர்கள் இருக்கக்கூடிய இந்தியப் பாராளுமன்றத்தின் சூழலைக் கருத்தில்கொண்டு அவர் அங்கே ஹிந்தி அல்லது ஆங்கிலத்தில் உரையாற்றினார். பாராளுமன்றத்தில் முதல் மூன்று ஆண்டுகளின் அவரது நடவடிக்கைகளைப் பற்றி அவரது தொகுதி வாக்காளர்களும் வங்க மொழி பேசும் அவரது மாநில மக்களும் தெரிந்து கொள்ளவேண்டும் என்பதற்காக, அவர் பாராளுமன்றத்தில் அவர் ஆற்றிய சில முக்கியமான உரைகள், கேள்விகள், முன்மொழிவுகள், கடிதங்களை பெங்காலி மொழிக்கு மொழிபெயர்த்து அவற்றை ஒன்று சேர்த்து பாராளுமன்றத்தில் டாக்டர் தருண் மண்டல் என்ற தலைப்பில் ஒரு புத்தகமாக வெளியிட்டார். அவர் எதற்காக இந்த முன்முயற்சியை மேற்கொண்டார்? வேறு எந்த பாராளுமன்ற உறுப்பினரும் இவ்வாறு செய்ததாகத் தெரியவில்லை. இது குறித்த கேள்விக்கு டாக்டர் தருண் மண்டல் பதிலளிக்கையில் 'தாங்கள் தேர்ந்தெடுத்த பிரதிநிதி பாராளுமன்றத்தில் என்ன செய்கிறார் என்பதை அறிந்து கொள்ளும் உரிமை எனது வாக்காளர்களுக்கு இருக்கிறது' என்று கூறினார். இந்த புத்தகம் பெரும் பாராட்டையும் வரவேற்பையும் பெற்றது. இந்த வெளியீட்டை ஒருவர் படித்துப் பார்த்தால், அவர் மக்களின் நலனை உயர்த்திப் பிடித்து பாராளுமன்றத்தில் என்ன பேசினார் என்பதைத் தெரிந்துகொள்ளலாம். அதோடு முதலாளித்துவம் தனது மீண்டெழமுடியாத நெருக்கடியை எப்படி சாமானிய மக்களின்மீது சுமத்தி அவர்களது வாழ்க்கையை தாங்கிக்கொள்ள முடியாத துயரமிக்கதாக ஆக்குகிறது என்பதையும், பொதுமக்கள் எப்படி ஏமாற்றப்படுகிறார்கள் சுரண்டப்படுகிறார்கள் என்பதையும், அதோடு பொது மக்களுக்கு வறுமையையும் தரித்திரத்தையும் அளித்து விட்டு கொழுத்த லாபத்தை ஈட்டுவதற்காக முதலாளித்துவத்திற்கு எப்படி பரந்த விரிவான வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன என்பதையும் இந்த புத்தகத்திலிருந்து தெரிந்துகொள்ளலாம். வாழ்க்கையின் பிரச்சினைகள் எங்கிருந்து எப்படி வருகின்றன என்பவை பொதுவாக ஏமாற்றப்பட்டு மறைக்கப்பட்டு வருகின்றன, ஆனால் இந்த புத்தகத்தினைப் படிப்பவர் அதனைத் தெரிந்துகொள்ளலாம். ஊடகங்களில் வரும் செய்திகள் எல்லாம் உண்மையையே பிரதிபலிக்கின்றன என்று நம்புவோருக்கு இது மனக்கதவைத் திறக்கும் ஒன்றாக விளங்கும். பிரச்சினைகளின் குணாம்சத்தைச் சரியாகப் புரிந்துகொள்வதற்கு இந்தப் புத்தகம் அவர்களுக்கு உதவும். இந்த வகையில் பார்த்தால், டாக்டர் தருண் மண்டல் அவர்களின் இந்தப் புத்தகம் மிகவும் மதிப்புமிக்க ஆவணமாகும்.

டாக்டர் தருண் மண்டல் மற்றொன்றையும் செய்திருக்கிறார். பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதியில், தனது தொகுதியில் வளர்ச்சிப்பணிக்காக ஒதுக்கப்பட்ட நிதி மற்றும் அதன் செலவீனங்களையும்

தொடர்ச்சி 4ம் பக்கம்

# மார்ச் 5 – பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் தலைவர் ஸ்டாலினின் 61வது நினைவுதினம்

மார்க்ஸ், எங்கல்ஸ், லெனின் ஆகியோரின் வழியில் தோன்றிய பாட்டாளிவர்க்கத் மாபெரும் தலைவர் ஸ்டாலின் நினைவுதினப் பொதுக் கூட்டம் சென்னை புரசைவாக்கம் தாணா தெருவில் நடைபெற்றது. எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் மாவட்ட அமைப்புக் கமிட்டி உறுப்பினர் தோழர் வி சிவக்குமார் தலைமை தாங்கி உரையாற்றினார். முதலில் ஸ்டாலின் உருவப்படத்திற்கு மலர் அஞ்சலி செலுத்தப் பட்டது. தோழர்கள் எஸ் கணேசன், திலகர், தோழர் ஸ்டாலினுக்கு மரியாதை செலுத்தி உரையாற்றினர். சிறப்புரையாக கட்சியின் மாநில அமைப்புக் கமிட்டியின் உறுப்பினர் தோழர் அனவரதன் உரையாற்றினார். சர்வதேசப் பண்ணுடன் கூட்டம் முடிவடைந்தது.





**மார்ச் 5, 2014 அன்று ஸ்டாலினின் 61வது நினைவுதினப் பொதுக்கூட்டம் சென்னை, புரசைவாக்கத்தில் நடைபெற்றது. தோழர் அனவரதன், எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டி உறுப்பினர் உரையாற்றுகிறார்.**

### தோழர் தருண் மண்டல்...

# பல்வேறு மக்கள் கோரிக்கைகளுக்காகவும் மக்கள் விரோத கொள்கைகளை எதிர்த்தும் பாராளுமன்றத்தில் 75 முறை பேசினார்

3ம் பக்கத் தொடர்ச்சி

மிகவும் நுணுக்கமாக, சட்டமன்ற தொகுதி வாரியாகவும், தாலுகா வாரியாகவும் விரிவாக விவரங்களை 'வளர்ச்சி கணக்குவழக்கு' என்ற தனது நூலில் வெளியிட்டுள்ளார். அத்தகைய இந்த முயற்சியானது, மாநிலத்தில் மட்டுமல்ல ஒட்டுமொத்த நாட்டிலும்கூட வேறு எவரும் இதுவரை செய்திராத ஒன்றாகும். 'நாங்கள் இந்தப் புத்தகத்தை அனைவரிடமும் காட்டி, இந்த நாட்டில் ஒரே ஒரு எம்பி தான் தனது ஐந்தாண்டுகால நடவடிக்கைகளின் ஒட்டுமொத்த வரவு செலவுக் கணக்கையும் புத்தகமாக வெளியிட்டுள்ளார் என்று கூறுவோம். இவரை மீண்டும் நாம் வெற்றிபெறச் செய்யாவிட்டால், நமக்கு நாமே தீங்கிழைத்துவிடுவோம்.' என்று கேனிங் சட்டமன்றத் தொகுதியைச் சேர்ந்த பப்லு மித்ரா பெருமிதத்தோடு உரக்கக் கூறுவதைப் போன்று பலர் பேசிவருகின்றனர். இத்தகைய விவாதங்கள்தான் ஜாய்நகர் தொகுதி முழுவதும் ஏழை மற்றும் நடுத்தர மக்களிடம் நடைபெற்று வருகிறது.

### பாராளுமன்றத்தில் முதல் முறையாக தியாகி குதிராம் போஸின் நினைவு நாள்

11 ஆகஸ்ட் 2010ல் டாக்டர் தருண் மண்டல் அவர்களின் முன்முயற்சியால் இந்தியப் பாராளுமன்றத்தில் ஒரு புதிய வரலாறு படைக்கப்பட்டது. சுதந்திர இந்தியாவின் முதல் பாராளுமன்றக் கூட்டத்தொடர் 1952ல் நடைபெற்றது. அதற்குப் பின்னர் தியாகி குதிராம் போஸ் தூக்கிலடப்பட்ட தினம் 58 முறை வந்து சென்றது. புகழ்பெற்ற இந்திய விடுதலைப் போராட்டத்தில் முதல் முதலின் தூக்குக் கயிற்றை முத்தமிட்ட முதல் தியாகி குதிராம் போஸ். ஆனால் அவரது நினைவு தினத்தை அனுசரிக்க வேண்டும் என்று சுதந்திர இந்தியாவின் பாராளுமன்றம் இதுவரை நினைத்துக்கூடப் பார்க்கவும் இல்லை, எந்தவொரு எம்பியும் இதற்கு வலியுறுத்தவும் இல்லை. நமது சுதந்திரப்போராட்டத்தின் சமரசமற்ற புரட்சிகரப் போக்கிற்கான உரிய அங்கீகாரத்தை மத்திய அரசாங்கம் ஒருபோதும் வழங்கியதில்லை, அதுபோலவே தியாகி குதிராமின் மாபெரும் தியாகத்தையும் அவர்கள் அங்கீகரிக்கவில்லை. குதிராமை 'தீவிரவாதி' என்று கூட அழைத்த, ஜவகர்லால் நேரு, சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமர், 1956ல் முசாபர்பூர் நகரில் அந்த தியாகியின் சிலையைத் திறந்து வைப்பதற்கு மறுத்தார். ஆனால் தலைசிறந்த மார்க்சிய சிந்தனையாளரும் பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் தலைவருமான தோழர் சிப்தாஸ் கோஷின் புரட்சிகர சிந்தனைகளைச் சுமந்து செயல்படும் தோழர் தருண் மண்டல் அவர்கள் தியாகி குதிராமின் மார்பிள் சிலையை பாராளுமன்ற வளாகத்தில் நிறுவவேண்டும் என்றும் ஆகஸ்ட் 11ஐ தியாகி குதிராம் தினமாக உரிய மரியாதை அங்கீகாரத்தோடு அனுசரிக்கவேண்டும் என்றும் வலியுறுத்தினார். இது சம்பந்தமாக ஆகஸ்ட் 10, 2010 அன்று மாண்புமிகு சபாநாயகர் மீரா குமார் அவர்களுக்கு கடிதம் எழுதினார். அவரது வேண்டுகோளை ஏற்ற, மாண்புமிகு சபாநாயகர் அவர்கள் அடுத்த நாள் அவையில் பின்வரும் வாசகத்தை படித்தார்: 'மாண்புமிகு உறுப்பினர்களே, 103 ஆண்டுகளுக்கு முன்பு, காலனியாதிக்க ஏகாதிபத்திய ஆட்சியின் பிடியிலிருந்து நாட்டை விடுதலை செய்வதற்கான போராட்டத்தின் போக்கில், 18 வயது குதிராம் போஸ் 11 ஆகஸ்ட் 1908 அன்று தியாக மரணம் எய்தினார். குதிராம் நிகழ்த்திக்காட்டிய தீக்கனலும், வீரதீரமும், தேசப்பற்றும் என்றென்றும் நம் அனைவருக்கும் உந்துசக்தியாக விளங்கும். தியாகி குதிராமுக்கும் நமது விடுதலை இயக்கத்தின் மற்ற தியாகிகளுக்கும் நமது மரியாதையை செலுத்துவோம். தியாகிகளின் நினைவாக இந்த அவை ஒரு நிமிடம் மௌனம் அனுசரிக்கும்.' அதன் பிறகு அனைத்து உறுப்பினர்களும் எழுந்து நின்று குதிராமின் நினைவாக ஒரு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தினர். இந்தியப் பாராளுமன்ற வரலாற்றின் ஒரு நினைவு கூறத்தக்க மைல்கல்லாக இந்த நிகழ்வு அமையும். தோழர் தருண் மண்டலின் முன்முயற்சியால், இந்திய சுதந்திரப் போராட்டத்தின் சமரசமற்ற புரட்சிகரப்போக்கிற்கான மரியாதை அவையில் கிடைத்தது. தோழர் தருண் மண்டல் தனது தொகுதியின் கௌரவம், அதேபோல் மாநிலத்திற்கும் நாட்டிற்கும் கௌரவம். வேறு எந்த எம்பியும் செய்யாததை அவர் செய்துவிட்டார். 58 ஆண்டுகளுக்குப் பின்னர் நடந்திருக்கக்கூடிய இது, பாட்டாளிகளின் மாபெரும் புரட்சிகரத் தலைவர் தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்களின் போதனைகளின் படி மறுமலர்ச்சி காலகட்டத்தின் மாபெரும் மனிதர்கள், விடுதலைப்போராட்டத்தின் புரட்சிகர வீரர்கள் மற்றும் தியாகிகள் அனைவருக்கும் ஒவ்வொரு ஆண்டும் மரியாதை செலுத்திவரும் ஒரே கட்சியான, எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் எம்பியால் தான் இதுவும் சாத்தியமானது.

### எம்பிகளின் ஊதிய உயர்வுக்கு எதிராக ஒலித்த ஒரே குரல்

15வது மக்களவையின் 543 உறுப்பினர்களில் 321 பேர் கோடிக்கணக்கில் சொத்து வைத்திருப்பதாகவும் மற்றவர்களில் 180 பேர் லட்சாதிபதிகள் என்றும் கூறப்பட்டுள்ளது. ரூ16,000 சம்பளம், ரூ20,000 தொகுதிப்படி, அலுவலகத்தையும் தனிச் செயலாளரையும் பராமரிப்பதற்காக ரூ20,000, அதோடு பாராளுமன்ற அவை கூடுகின்ற நாட்களிலும் பாராளுமன்றக் கமிட்டிக் கூட்டங்கள் நடைபெறும் நாட்களிலும் தினமும் ரூ1000 என எம்பிக்கள் மாதம்தோறும் ரூ1 லட்சத்திற்கும் மேல் ஊதியமாகவும் அதோடு தொலைபேசி, மின்சாரம், பயணம், சகல வசதிகளும் நிறைந்த வீடு அல்லது பங்களா போன்ற சலுகைகளையும் பெற்று வந்தனர். ஆனாலும் கூட ஊதியத்தை 5 மடங்கு உயர்த்த வேண்டும் என்று கட்சி வேறு பாடின்றி மற்ற அனைத்து உறுப்பினர்களும் வலியுறுத்தினர். 543 பேர்களில் ஒரே ஒரு எம்பி தான் எதிர்ப்புத் தெரிவித்தார். அவர் பாட்டாளி வர்க்கத்தின் உண்மையான புரட்சிகரக் கம்யூனிஸ்ட் கட்சியான எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) எம்பி தோழர் தருண் மண்டல் அவர்களேயாவார். விவாதத்தில் பங்கேற்று, 17 ஆகஸ்ட் 2010ல் பேசிய அவர்; 'உறுப்பினர்களின் சம்பளத்தை உயர்த்தும் இந்த முன்மொழிவை நான் எதிர்க்கிறேன். மிகுந்த வேதனை அளிக்கும் விலைவாசி உயர்வு, வேலையின்மை மற்றும் ஆட்குறைப்பால் நாட்டு மக்கள் சிக்கித் தவித்து வருகையில், காஷ்மீரில் உள்ள லே பகுதி மக்கள் கடுமையான இயற்கைப் பேரழிவால் கடுமையான அழிவைச் சந்தித்து வருகையில்; கடுமையான வறட்சியால் விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கையில் ஆயிரக்கணக்கான விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டிருக்கையில், அதோடு போபால் விஷ வாயு கசிவு விபத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய நிவாரணம் இன்னமும் வழங்கப்படாமல் உள்ள நிலையில் எம்பிக்களின் சம்பளத்தை உயர்த்தவேண்டும் என்ற கோரிக்கையே மிகவும் அநியாயமானதாகும். சாமானிய மக்கள் இதைக் கேட்டு ஆவேசப்படுவர்... எம்பிக்கள் மக்கள் பிரதிநிதிகளாவர் எனவே அவர்கள் இந்த அவையின் கௌரவ உறுப்பினர்கள். அவர்களுக்கான செலவீனங்கள் மக்களின் பொது நிதியிலிருந்து ஒதுக்கப்படுகிறது. அதிகாரிகளைப் போன்று அவர்கள் ஊதியம் பெறும் ஊழியர்கள் அல்லர். ...நாட்டிற்கு சேவை செய்வதற்காகத்தான் எம்பிக்கள் அரசியலில் குதித்தனர். இதனோடு சேர்ந்து அறநெறி, ஒழுக்க நெறி, மற்றும் சித்தாந்தம் குறித்த கேள்வி எழுகிறது. இந்தவகையில் பார்த்தால் இது ஊதியம் பெறும் வேலை அல்ல. தேவைப்பட்டால், உறுப்பினர்களை மக்களே பார்த்துக்கொள்வார்கள். அப்படித்தான் இது இருக்கவும் வேண்டும்' என்று கூறினார்.

அவருக்கு வேறு எந்த ஒரு உறுப்பினரும் ஆதரவு தெரிவிக்கவில்லை. காங்கிரஸ், பாஜக, திமுக, அதிமுக, போன்ற பிற கட்சி உறுப்பினர்கள் மட்டுமல்ல தங்களை ஏழைகளின் பிரதிநிதகள் என்று கூறிக்கொள்ளும் சிபிஐ(எம்) மற்றும் சிபிஐ கட்சிகளின் உறுப்பினர்களும் கூட மௌனம் காத்தனர். மாறாக இவர்கள் அனைவரும் தோழர் தருண் மண்டலை கேலியாகப் பார்த்தனர். எனவே அவைக்குள் மக்களின் நலன்களையும் மக்களின் குரலையும் ஒரே ஒரு உறுப்பினர்தான் எதிரொலித்தார். ஒடுக்கப்படும் பெரும்பாலோரின் உண்மையான புரட்சிகரக் கட்சியான எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் எம்பி தான் அவர். இதர 542 உறுப்பினர்களும் தங்களது சொத்துக்களை, அதிகாரங்களை எப்படிப் பெருக்குவது என்பதில் தான் முழு குறியாக இருந்தனர். எனவேதான் எம்பிக்களின் ஊதியத்தை உயர்த்தும் முடிவை ஒரு குரலால் தடுத்து நிறுத்த இயலவில்லை. இறுதியாக, எம்பிக்களின் சம்பளம் மாதமொன்றுக்கு ரூ16,000லிருந்து ரூ50,000 ஆகவும், தொகுதிப் படி ரூ20,000லிருந்து ரூ45,000 ஆகவும் உயர்த்தப்பட்டது. ஆக ஒட்டு மொத்தமாக மாதமொன்றுக்கு ரூ59,000 உயர்த்தப்பட்டது. பாராளுமன்றக் கூட்டங்கள், கமிட்டிக் கூட்டங்களில் கலந்து கொள்வதற்கான தினப்படி இரண்டு மடங்காக ரூ2000 ஆக உயர்த்தப்பட்டது. இப்படியாக மொத்த உயர்வு ரூபாய் ஒரு லட்சத்தையும் தாண்டியது. பத்திரிகையாளர் சந்திப்பில், மிகுந்த வேதனையோடு டாக்டர் தருண் மண்டல் கூறியதாவது; 'எனது ஜாய் நகர் தொகுதியில் ஏராளமான ஏழைகள் தங்களது குழந்தைகளின் டியூசன் கட்டணத்தைக் கட்ட முடியாமல் தவிக்கின்றனர். பலர் தங்களது குறைந்தபட்ச மருத்துவ செலவைக்கூட தாங்க முடியா ஏழைகளாக உள்ளனர். அவர்களில் பலர் என்னிடம் உதவி கோருகின்றனர். பாராளுமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதியை இதற்காகப் பயன்படுத்த முடியாது. எனவே எனது படிகளில் குறிப்பிட்ட அளவை அத்தகைய தேவையானவர்களுக்கு உதவுகிறேன்.'

### அதிகரிக்கப்பட்ட ஊதியத்தில் மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை மற்றும் மருத்துவ உதவிகள்

இந்த ஒடுக்கப்பட்ட மக்களின் அவல தரித்திர ஏழ்மை நிலையைப் பற்றி எண்ணாமல் அவரால் எப்படி இந்த ஊதிய உயர்வை ஏற்க முடியும்? எனவே இத்தகைய முன்மொழிவைக் கண்டு அவமானத்தால் வேதனைப்பட்டார். 29 ஆகஸ்ட் 2010 தேதியிட்ட எகனாமிக் டைம்ஸ் 'எம்பிக்களுக்கு ஏராளமாக் ஊதிய உயர்வு வழங்குவதை எதிர்க்கும் ஒரே போராளி' என்று தலைப்பில் செய்தி வெளியிட்டது. 'பெரும்பாலான பாராளுமன்ற உறுப்பினர்கள் ஊதியத்தையும் படிகளையும் உயர்த்தித் தரக் கோருகையில், அதற்கு நேர் மாறாக தருண் மண்டல் அவர்களின் குரல் தனிப்பட்ட ஒன்றாக நிற்கிறது. மிகவும் வேதனையோடு கடுமையாக எதிர்க்கிறார்' என்று குறிப்பிட்டது. தொடர்ந்து 'பணம் மற்றும் படிகளை உயர்த்தித் தரவேண்டும் என்று நாம் கோரவேண்டும் என்று நான் நினைக்கவில்லை. சம்பளம், பல்வேறு படிகள் என 1 லட்சத்திற்கும் மேல் நாம் வருமானமாகப் பெறுகிறோம். மக்கள் பிரதிநிதிகளாகிய நமக்கு இது தேவைக்கும் மிகவும் அதிகமானதென்றே நான் உணர்கிறேன். வறுமை– பீடித்துள்ள பெருவாரியான மக்களின் பிரதிநிதிகள் நாம். எனது தொகுதியில், ஐலா புயல் தாக்கத்திற்குப் பிந்தைய சூழலைச் சமாளிப்பதற்கு உரிய போதுமான இழப்பீட்டுத் தொகையை இன்னமும் பெறாமல் ஏராளமான ஏழைகள் உள்ளனர். இந்த சூழலில் இயற்கையாகவே பாராளுமன்றத்தில் பெருவாரியாக ஊதியத்தையும் படிகளையும் உயர்த்தவேண்டும் என்று கூக்குரல் எழுப்புவது நாகரீகமாகப்படவில்லை. ...எம்பியாக இலவச வீட்டு வசதியை நான் அனுபவிக்கிறேன். மின் கட்டணம் மற்றும் தொலைபேசிக் கட்டணத்தையும் நான் செலுத்தவேண்டியதில்லை. ஊதிய உயர்வை நான் எதிர்க்கின்ற போதிலும்கூட, உயர்த்தப்பட்ட ஊதியத்தையும் படிகளையும் நான் பெற்றுத்தான் ஆகவேண்டும். உயர்த்தப்பட்ட படிகளை எனது தொகுதி மக்களுக்காகவே பயன்படுத்தி அவர்களுக்கு மேலும் சேவை செய்ய முடியும் என்று எண்ணுகிறேன்.' என்று தோழர் தருண் மண்டல் கூறியதைச் மேற்கோள் காட்டியுள்ளது.

உண்மையில், அவர் சொன்னதைச் செய்துள்ளார். உயர்த்தப்பட்ட படிகளை அவர் தனக்காகச் செலவழிக்கவில்லை. மாறாக, அவரது தொகுதிக்குட்பட்ட 9 பிளாக்குகளைச் சேர்ந்த தகுதிவாய்ந்த 36 ஏழை மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்குவதற்கும் பல்வேறு இலவச மருத்துவ முகாம்களை நடத்துவதற்கும் செலவு செய்துள்ளார். மாதந்தோறும் ரூ30,600 கல்வி உதவித்தொகைக்கும் ரூ28,400 மருத்துவ முகாம்களுக்கும் செலவழிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் கல்வி உதவித்தொகை பெறுவதற்குத் தகுதிவாய்ந்த மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக 9,10,11 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு எழுத்துத் தேர்வு நடத்தப்பட்டது. இவை எல்லாவற்றிற்கும் மேலாக, தேர்வை நடத்துவதற்கு, அதற்கான மற்ற ஏற்பாடுகளுக்கும் அதேபோல் உதவித் தொகை வழங்குவதற்கான நிகழ்ச்சிகளுக்கும் தேவைப்படும் பெரிய அளவிலான

தொடர்ச்சி 5ம் பக்கம்

## தோழர் தருண் மண்டல்...

# பாராளுமன்றத் தொகுதி வளர்ச்சி நிதியை பாரபட்சமின்றி 7 சட்டமன்றத் தொகுதிகளிலும் பயன்படுத்தினார்

4ம் பக்கத் தொடர்ச்சி

தொகையையும் டாக்டர் தருண் மண்டல் அவர்களே ஏற்றுக்கொண்டார்.

இதுவும் நமது நாட்டு வரலாற்றில் முன்னெப்போது கண்டிராததாகும். இதுபோன்ற நடவடிக்கைகளை மேற்கொண்ட ஒரே எம்பியாக அவர் திகழ்ந்தார். எனவேதான் மக்ரஹட் ரயில்வே நிலையத்தில் மற்ற கட்சிகளில் ஊழியர்களைப் பார்த்து சில பொதுவான மக்கள் பின்வருமாறு கூறுகின்றனர்: 'எங்கள் குழந்தைகளின் கல்விக்கான செலவை அவர் ஏற்றுக்கொள்கிறார் அதோடு ஏழை மக்களின் மருத்துவ சிகிச்சைக்கான செலவையும் தனது ஊதியத்திலிருந்து தருகிறார். இப்போது சொல்லுங்கள், வேறு யாருக்கு நாங்கள் வாக்களிப்பது என்று.' இது தொடர்பாக, எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) முன்னாள் எம்எல்ஏக்களான தோழர் பிரபோத் புர்காயத் மற்றும் தோழர் தேவப்பிரசாத் சர்க்கார் ஆகியோரைப் போலவே சொல்ல வேண்டியது என்னவெனில் மேற்கு வங்க சட்டசபையில் எம்எல்ஏக்களுக்கான ஊதியங்களையும் இதர சலுகைகளைகளை உயர்த்துவதற்கு எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) எம்எல்ஏ தோழர் தருண் கன்ட்டி நஸ்கர் ஒருவர் மட்டும் எதிர்ப்பு தெரிவித்தார். தோழர் தருண் மண்டலைப் போலவே தோழர் நஸ்கரும் தனக்கு வழங்கப்பட்ட உயர்த்தப்பட்ட தொகையை தகுதியான ஏழை மாணவர்களின் கல்வி உதவித்தொகைக்காக செலவிட்டார்.

### எம்பி தொகுதி மேம்பாட்டு நிதியை வளர்ச்சிக்காகப் பயன்படுத்தினார்

கடந்த 5 ஆண்டுகளில் தனது தொகுதியின் பல்வேறு வளர்ச்சிப் பணிகளுக்காக ரூ20 கோடியே 80 லட்சம் அளவிற்கு திட்ட முன்மொழிவுகளை சமர்பித்துள்ளார். இந்த அனைத்துத் திட்ட முன்மொழிவுகளும் நிர்வாகத்தின் ஒப்புதலைப் பெற்றுள்ளன. பெரும்பாலான பணிகள் நிறைவடைந்துவிட்டன, மீதமுள்ளவை முடியும் தறுவாயில் உள்ளன. தொகுதி மேம்பாட்டு நிதியை தனது தொகுதிக்குட்பட்ட 7 சட்டமன்ற தொகுதிகளுக்கும் சரிசமமாகப் பகிர்ந்து அளித்துள்ளார்.

அவரது எம்பி தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ11,500 நிதி உதவியோடு 12 இலவச பெரு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டன. இந்த முகாம்களின்மூலம் 12,000க்கும் மேற்பட்ட நோயாளிகள் மருத்துவ சிகிச்சை பெற்றனர். சமீபத்தில் இத்தகைய முகாம்களுக்கு மத்திய அரசாங்கம் தடை விதித்துள்ளது. டாக்டர் மண்டல் அவர்களின் பரிந்துரையின் பேரில் 100 நோயாளிகள் பிரதமர் அலுவலகம் மற்றும் இதர மத்திய அரசாங்கத் துறைகளின் நிதி உதவியைப் பெற்றனர். இந்தப் பயனாளிகளின் பெயர்கள், முகவரிகள் மற்றும் இதர விவரங்கள் டாக்டர் மண்டல் வெளியிட்டுள்ள 'உன்னயினர் காட்டியன்' என்ற புத்தகத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 5 ஆண்டுகளில், அவரிடம் உதவி கேட்டு வந்தவர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்று கேட்கவும் இல்லை, யாருடைய பரிந்துரையையும் எதிர்பார்க்கவில்லை. இன்று பொதுச் சேவை செய்பவர்களில் கட்சி அல்லது அரசியல் சார்பின்றி இருப்பவர்கள் வேறு யாரையும் காண்பது அரிது. இதை மாற்றுக் கட்சியைச் சேர்ந்த தலைவர்கள்–தொண்டர்கள் ஒப்புக்கொள்வதோடு இப்படிப்பட்ட நல்ல மனிதரைக் கண்பது மிகவும் அரிது என்று வெளிப்படையாகவே கூறுகின்றனர். கடந்த ஐந்து ஆண்டுகளில், மக்களுக்காகப் பணியாற்றுவது என்றால் உண்மையில் என்ன என்பதை செய்து காண்பித்திருக்கிறார்.

ஜாய்நகர் தொகுதியின் 9 பிளாக்குகள் மற்றும் 7 சட்டமன்றத் தொகுதியைச் சேர்ந்த வாக்காளர்களின் எதிர்பார்ப்பிற்கிணங்க முழுமையாக டாக்டர் தருண் மண்டல் வாழ்ந்திருக்கிறார் என்பது தெள்ளத் தெளிவாகிறது. அவர்மீது வைக்கப்பட்ட நம்பிக்கைக்கு முற்றிலும் பாத்திரமானவராக இருந்ததோடு தனது அனைத்து வாக்குறுதிகளையும் நிறைவேற்றியுள்ளார். அனுப் பிஸ்வாஸ், கேன்னிங் கிழக்குப் பகுதியைச் சேர்ந்த ஒரு கிளப்பின் செயலாளர், ஒரு பொதுக்கூட்டத்தில் தெரிவித்ததாவது; 'கடந்த காலத்தில் இதுபோன்ற ஒரு எம்பிஐ ஜாய் நகர் கண்டதில்லை. அத்தகைய நபர் மீண்டும் தேர்வு செய்யப்படவேண்டும்.'

### ஐலா புயல் பேரழிவு நேரத்தில்

மேற்கு வங்கத்திலும் ஒடிசாவிலும் மே 25, 2009 இல் ஐலா புயல் கோரதாண்டவம் ஆடிய முதல் நாளே புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட எம்பி களத்தில் இறங்கிவிட்டார். அடுத்த நாளே, அதாவது மே 26லேயே, பாசந்தி, கொசபா போன்ற பல்வேறு பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சென்றடைந்தார். அவரை உரிய நேரத்தில் உதவும் உற்ற நண்பனாக தங்களது இதயத்தின் ஆழத்தில் ஏற்றுக்கொண்ட ஐலா புயல் பாதித்த மக்கள், கூறியதாவது; 'வெள்ளத்தால் நாங்கள் சூழப்பட்டிருந்த வேளையில் எங்களது எம்பி எங்களோடு இருப்பார் என்று நாங்கள் கனவிலும் நினைக்கவில்லை. அபாயகரமான நேரத்தில் இதுவரை எந்த அமைச்சரையோ அல்லது எம்பியையோ இதுவரை நாங்கள் பார்த்ததில்லை.' நிவாரண ஏற்பாடுகளை நிர்வாகம் சரிவர செய்யாததால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குக் கொண்டு செல்லப்படமுடியவில்லை. அந்த அளவிற்கு நிர்வாகம் பயனற்றதாக இருந்தது. இயற்கையாகவே, மக்கள் ஆத்திரமடைந்து எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். அதன்பிறகு தோழர் மண்டல் அவர்களது முன்முயற்சியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப்பொருட்கள் விரைவாக கிடைத்தன. அதே நேரத்தில் நடைபெற்று வரும் பணிகளைப் பற்றி மாவட்ட ஆட்சியருக்குத் தெரிவித்து உடனடியாக சீரமைக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வலியுறுத்திக்கொண்டே இருந்தார். பின்னர் முதலமைச்சரைச் சந்தித்த அவர் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு போதுமான நிவாரண உதவி 'பொருட்களை உடனடியாக அனுப்ப ஏற்பாடு செய்யுமாறு வேண்டுகோள் விடுத்தார். அரசியல் காழ்ப்புணர்ச்சியின் பாதிக்கப்பட்டவர் எந்தக் கட்சியைச் சார்ந்தவர் என்ற பாரபட்சம் இன்றி நிவாரணம் வழங்க வேண்டும் என்றும் அவர் முதலமைச்சரைக் கேட்டுக்கொண்டார். வெள்ளத்தில் சிக்கிய மக்களை உடனடியாக மீட்பதற்கு இராணுவத்தை வரவழைத்து ஹெலிகாப்டர் மூலம் மீட்புப் பணிகளை மேற்கொள்ளுமாறும் பிரதமருக்கு வேண்டுகோள் விடுத்தார். ஐலாவால் பாதிக்கப்பட்ட மக்களின் இன்னல்களை பாராளுமன்றத்திலும் டாக்டர் தருண் மண்டல் அவர்கள் எடுத்துரைத்தார்.

அதேபோன்று இயற்கைச் சீற்றத்தைத் நீண்ட காலத்திற்குத் தடுக்கவல்ல ஆற்றுப்படுகை பலப்படுத்தும் திட்டத்தை வெகு சீக்கிரம் தொடங்க வேண்டும் என்றும் பாராளுமன்றத்தில் கோரிக்கை வைத்தார்.

### அவரது தொகுதிக்கு உட்பட்ட அனைத்து பஞ்சாயத்துகளுக்கும் சென்றார்

எல்லாவற்றிற்கும் மேலாக, ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதி என்ற முறையில், அவரது தொகுதிக்கு உட்பட்ட ஏழு சட்டமன்றத் தொகுதிகளிலும் உள்ள அனைத்து பஞ்சாயத்துகளுக்கும் அவர் சீரான இடைவெளியில் சென்று வந்தார். மக்களிடம் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்வதற்காக, அவர் பல 'விவாதக் கூட்டங்களை' நடத்தினார். தனிப்பட்ட அல்லது உள்ளூர் அல்லது மருத்துவம் அல்லது சமூக–அரசியல்–கலாச்சாரம் தொடர்பாக எந்த பிரச்சினையாக இருந்தாலும் அதை ஏழை பணக்காரர் என்ற வித்தியாசமில்லாமல் அவரிடம் எந்த தயக்கமுமின்றி பேசலாம். எனவேதான் அவரை 'பணி செய்யும் மனிதர்' என்று அழைப்பதோடு மட்டுமல்லாது 'தங்களது இதயத்திற்கு நெருக்கமான மனிதர்' என்றும் அழைத்தனர். மக்களிடமிருந்து அவர் கேட்டறிந்த பிரச்சினைகள் ஒன்று பாராளுமன்றத்தில் எழுப்பப்பட்டன, அல்லது சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டது அல்லது அமைச்சர்கள் அல்லது சம்பந்தப்பட்ட அதிகாரிகளைச் சந்தித்துப் பேசும்போது எடுத்துக்கூறப்பட்டது. கொசபா–பசந்தியை கென்னிங் உடன் இணைப்பதற்காக மட்லா ஆற்றின் மீது ரயில்வே பாலம் அமைத்தல், சாலை இணைப்புகளையும் போக்குவரத்து வசதிகளையும் மேம்படுத்துதல், ஐலாவால் பாதித்தவர்களுக்கு இழப்பீட்டுத் தொகை, வெள்ளக் கூடாரங்கள், ஆற்றுப்படுகைகளை ஸ்திரப்படுத்துவதற்கு விஞ்ஞானபூர்வ முறைகள், மருத்துவனைகள் மற்றும் பொது சுகாதார வசதிகளை மேம்படுத்துதல், மின்சாரம் மற்றும் குடிநீர் பிரச்சினை, முறையான பாசன வசதி மற்றும் சாக்கடை வசதி போன்ற பல பிரச்சினைகளை சம்பந்துப்பட்ட நபர்கள் மற்றும் அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு சென்றார்.

இந்த கோரிக்கைகளை எல்லாம் வெல்வதற்கு ஒரு எம்பி மட்டும் தனியாக செயல்பட்டாலோ, நேர்மையாக முன்முயற்சி எடுத்தல் மட்டும் போதாது என்ற உண்மையை மக்களுக்கு அவர் உணர்த்தியதோடு மட்டுமல்லாமல் அவர்களுடைய நியாயமான கோரிக்கைகளை வென்றெடுப்பதற்கு கட்சி பேதமின்றி உழைக்கும் மக்கள் அனைத்துத் தரப்பினரையும் ஒன்றிணைத்து மக்கள் போராட்டக் கமிட்டிகளை அமைக்க வேண்டும் என்றும் ஜனநாயக போராட்டங்களை வளர்த்தெடுக்கவேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்தார். அவரே முன்னின்று

தொடர்ச்சி 6ம் பக்கம்

# மார்ச் 14 – பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் தலைவர் கார்ல் மார்ஸ் 131வது நினைவுதினம்

பாட்டாளிவர்க்கத்தின் முதல் ஆசான் கார்ல் மார்க்ஸ் அவர்களின் 131வது நினைவுதினப் பொதுக்கூட்டம் சென்னையில் சைதாப்பேட்டை காரணீஸ்வரர் தேரடி தெருவில் மார்ச் 14, 2014 அன்று மாலை எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் மாநில அமைப்புக் கமிட்டியால் நடத்தப்பட்டது. அதன் உறுப்பினர் தோழர் அனவரதன் கூட்டத்திற்கு தலைமைதாங்கினார். சென்னை மாவட்ட அமைப்புக் கமிட்டி உறுப்பினர்கள் தோழர் வி சிவகுமார், எஸ் கணேசன் அகியோர் உரையாற்றினர். இவ்விருவரும் வடசென்னை மற்றும் தென்சென்னை நாடாளுமன்ற தொகுதியின் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) வேட்பாளர்களாக கட்சியின் மாநிலச் செயலாளர் தோழர் A ரெங்கசாமி அவர்களால் மக்களுக்கு அறிமுகப் படுத்தப்பட்டனர்.






மார்ச் 14, 2014 அன்று கார்ல் மார்க்ஸ்–ன் 131வது நினைவுதினப் பொதுக்கூட்டம் சென்னை சைதாப்பேட்டையில் நடைபெற்றது. தோழர் A ரெங்கசாமி, எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் உரையாற்றுகிறார்.

## தோழர் தருண் மண்டல்...

# மக்களின் துயரம் மற்றும் போராட்டங்களில் அவர்களுடன் துணை நின்றார்

5ம் பக்கத் தொடர்ச்சி

பல மக்கள் கமிட்டிகளை அமைத்து மக்கள் இயக்கங்களையும் கட்டினார்.

### தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளின் நலன்களை உயர்த்திப் பிடித்தார்

தோழர் மண்டல் அவர்களின் பாராளுமன்றத் தொகுதி பெரும்பாலும் கிராமப்புறங்களை உள்ளடக்கியது. விவசாயிகளைத் தவிர்த்து அங்கு ஏராளமான தொழிலாளர்களும் உள்ளனர். விதைகள், உரங்கள், பூச்சிக்கொல்லிகள் போன்றவற்றை மலிவான விலையில் வழங்குமாறும் விவசாயிகளுக்கு கட்டுபடியான விலை நிர்ணயம் செய்யவும் அவர் பாராளுமன்றத்தில் வலியுறுத்தினார். மாநிலத்தில் மட்டுமல்லாது நாடுமுழுவதும் விவசாயிகள் தற்கொலை பெருகிவருவதை அவையின் கவனத்திற்கு அவர் கொண்டு வந்தார். மூடப்பட்ட தொழிற்சாலைகளைத் திறக்கவும் அவர் வலியுறுத்தினார். பகுதிநேர வீட்டு வேலை செய்பவர்களும் இன்னும் இதுபோன்ற வேலைகளுக்கு தங்கள் இடத்திலிருந்து தொலை தூரங்களுக்குச் சென்று பணி புரியும் ஏழைகள் ரயிலில் பயணம் மேற்கொள்வதற்கு மாதத்திற்கு ரூ25க்கான சலுகை பயணச் சீட்டைப் பெறுவதற்கான போராட்டத்திலும் அவர் குறிப்பிடத்தக்க பங்காற்றினார். சமீபத்தில், இந்த பரம ஏழைகள் இந்த கட்டணச் சலுகை பெறுவதில் ரயில்வே அதிகாரிகளால் கடும் துன்புறுத்தலுக்கு ஆளானபோது டில்லி ரயில்வே அமைச்சகத்திற்கு சென்று, ரயிவே அமைச்சரைச் சந்தித்து பின்னர் மத்திய ரயில்வே இணை அமைச்சர் திரு அதிர் சௌத்ரியை பெர்ஹாம்பூரில் (மேற்குவங்கம்) சந்தித்து உடனடியாக இந்த துன்புறுத்தல்களை நிறுத்தக்கோரிய ஒரே எம்பி இவர்தான். அங்கீகரிக்கப்பட்ட சமூக சுகாதாரப் பணியாளர்கள் (ஆஷா), ஒருங்கிணைந்த குழந்தைகள் முன்னேற்ற சேவை (ஐசிடிஎஸ்) பணியாளர்கள், கிராம மருத்துவர்கள், மற்றும் மோட்டார் வாகன பணியாளர்கள் ஆகியோரை அழைத்துச் சென்று சம்பந்தப்பட்ட அமைச்சர்களைச் சந்தித்து அவர்களது கோரிக்கைகளை முன்வைத்தார். இந்த கோரிக்கைகளை அவர் பாராளுமன்றத்திலும் எழுப்பினார்.

### கல்விக்கான இயக்கத்தில்

முந்தைய சிபிஐ(எம்) அரசாங்கத்தின் மக்கள் விரோத மற்றும் மொழிக்கொள்கைக்கு எதிராக மாநிலம் தழுவிய மாபெரும் போராட்டத்தில் ஒரு முக்கிய அமைப்பாளராக தனது மாணவப்பருவத்திலேயே தோழர் தருண் மண்டல் பங்காற்றினார். போராட்டத்திற்கு அடிபணிந்து தொடக்கப்பள்ளி அளவில் ஆங்கிலத்தை மீண்டும் அறிமுகப்படுத்த வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு சிபிஐ(எம்) அரசாங்கம் தள்ளப்பட்டது என்பதை மேற்கு வங்க மாநில மக்கள் அனைவரும் அறிவர். 1983யில் மாநிலத்தையே கலக்கிய ஜூனியர் மருத்துவர் போராட்டத்தில் அவர் முன்னணிப் பாத்திரம் வகித்தார். அதற்காக அவர் போலீஸ் தாக்குதல்களையும் சந்திக்க நேர்ந்தது. பின்னர் உண்மையிலேயே தகுதிவாய்ந்த முறையான மருத்துவர்களுக்குப் பதிலாக '2 1/2 வருட மருத்துவப் படிப்பை முடித்த' அரைகுறை – மருத்துவர்களுக்கு கிராமப்புற மக்களுக்கு சிகிச்சை அளிக்கு பொறுப்பை வழங்க சிபிஐ(எம்) தலைமையிலான அரசாங்கம் முடிவு செய்தபோது, மருத்துவர்களை ஒன்றிணைத்து எதிர்ப்பு இயக்கத்தை வளர்த்தெடுத்தார். கொல்கத்தாவில் உள்ள ஜாதவ்பூர் டிபி (காசநோய்) மருத்துவமனையை தனியாருக்கு ஒப்படைக்கும் முடிவை எதிர்த்து நடைபெற்ற இயக்கத்திற்கு மற்றவர்களுடன் இணைந்து அவரும் தலைமைதாங்கினார். மாநில அரசாங்க மருத்துவமனைகளில் தனியார் லாபமீட்டும் தொழில் புரிய அனுமதிப்பது என்ற முடிவை எதிர்த்து நடைபெற்ற இயக்கத்தில், மற்ற முன்னணி அமைப்பாளர்களுடன் இணைந்து இவர் முக்கியப் பங்காற்றினார். நாட்டின் பல்வேறு பகுதிகளில் நடந்த இயற்கைப் பேரழிவுகளில் பாதிக்கப்பட்டவர்களுக்கு, மெடிக்கல் சர்வீஸ் சென்டருடன் இணைந்து மருத்துவ சிகிச்சை வழங்குவதிலும் இவர் பங்கேற்றார்.

### பெண்கள் மீதான தாக்குதல்கள் மற்றும் மதவாதத்திற்கு எதிராக

பெருகிவரும் பெண்கள் மீதான குற்றங்கள் மற்றும் தாக்குதல்களுக்கு எதிராக பாராளுமன்றத்திற்கு உள்ளே குரல் கொடுத்ததோடு மட்டுமல்லாது பாராளுமன்றத்திற்கு வெளியே நடைபெற்ற போராட்டங்களிலும் டாக்டர் தருண் மண்டல் பங்கேற்றார். அவருடைய தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் மதவாத, குழு மோதல்களை தூண்டிவிட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோது உடனடியாக அப்பகுதிகளுக்கு விரைந்து சென்று நிலைமையை அமைதிப்படுத்தி உரிய நடவடிக்கை எடுக்குமாறு நிர்வாகத்திற்கு தெரியப்படுத்தினார். அதோடு அதற்கு எதிரான போராட்டங்களுக்கும் தலைமை ஏற்று அவற்றை முறியடிக்கவும் செய்தார்.

### பதுக்கல்காரர்கள்–கள்ளச்சந்தைக்காரர்கள்–இடைத்தரகர்களுக்கு எதிராக

விண்ணைமுட்டும் விலைவாசியால் திக்கு முக்காடி வரும் நாட்டு மக்களின் பக்கம் நின்று பாராளுமன்றத்தில் அவர் பேசியதாவது; 'பண வீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கும் அத்தியாவசியப் பொருட்கள் குறிப்பாக உணவுதானியப் பொருட்களின் விலை உயர்வைக் கட்டுப்படுத்துவதற்கும் அரசாங்கம் தவறிவிட்டது என்பதை எந்த சந்தேகமுமின்றி பதிவு செய்ய விரும்புகிறேன். அதே நேரத்தில், எதிர்க்கட்சிகளுக்கு விமர்சிக்கும் தகுதியும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை, ஏனெனில் அவர்கள் ஆண்ட அல்லது இன்னும் ஆண்டுகொண்டிருக்கக் கூடிய மாநிலங்களில் விலைவாசியைக் கட்டுப்படுத்துவதற்கும், கள்ளச் சந்தைக்காரர்களை, மோசடி இடைத்தரகர்களை, வியாபாரிகளை கைது செய்வதற்கும் பதுக்கலைத் தடுப்பதற்கும் அவர்களும் தோல்வி அடைந்துவிட்டனர். முக்கியமான மருந்துகள், பெட்ரோலியப் பொருட்கள், அதோடு மிக முக்கியமாக உணவு தானியங்கள் அதேபோன்று எல்பிஜி மற்றும் வீட்டு உபயோக கேஸ் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களையும் ஒட்டுமொத்த அரசு வர்த்தகத்தின் கீழ் கொண்டுவருவது ஒன்றுதான் அத்தியாவசியப் பொருட்களின் விலைகளைக் குறைப்பதற்கான ஒரே வழியாகும். அத்தியாவசியப் பொருட்கள் சட்டத்தை கடுமையாக அமல்படுத்துவதும் மிகவும் அவசியமாகும். இது தொடர்பாக அனைத்து மாநில அரசாங்கங்களும் மத்திய அரசாங்கமும் உடனடியாக நடவடிக்கையைத் தொடங்க வேண்டும். கள்ளச் சந்தைக்காரர்கள், நியாயமற்ற வர்த்தகர்கள், பதுக்கல்காரர்கள், சந்தை ஊக வியாபாரிகள் அனைவரும் கைது செய்யப்பட்டு அதிகபட்ச தண்டனை வழங்க வேண்டும்.

கடந்த ஆண்டு பட்ஜெட் கூட்டத்தொடரில், உணவு தானியப் பொருட்கள், உரங்கள், மற்றும் எரிபொருட்களுக்கு மானியங்களை குறைப்பதாக மாண்புமிகு நிதி அமைச்சர் அறிவித்தார். அந்த அறிவிப்பின் மிக மோசமான விளைவை இன்று குறிப்பாக உணவு தானியப்பொருட்களில் குறிப்பாக பெட்ரோலியப் பொருட்களில் உணரமுடிகிறது... பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்கள் இழப்பைச் சந்தித்து வருவதாக நாம் எப்போதுமே கேள்விப் படுகிறோம், ஆனால் அவை நஷ்டத்தில் இயங்குவதாக செய்தித்தாள்களில் நான் ஒருபோதும் பார்க்கவில்லை. நம்மைப்போன்றே உலகச் சந்தையிலிருந்து பெட்ரோலியப் பொருட்களை இறக்குமதி செய்யும் பாகிஸ்தான், இலங்கை, மலேசியா, நேபாள் போன்ற நமது அண்டை நாடுகளில் பெட்ரோலியப் பொருட்களின் விலை இந்தியாவைக் காட்டிலும் குறைவாக இருப்பதைப் பார்க்கும் போது எனக்கு ஆச்சர்யமாக உள்ளது... அரசாங்கத்தின் தரப்பில் மாண்புமிகு உறுப்பினர் பேசியதைக் கேட்டேன். அவர்கள் கையறு நிலையில் இருப்பதையும் விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த முடியவில்லை என்று அவர் ஒப்புக் கொண்டுவிட்டார்.

எனது கடைசி வாதம் என்னவெனில், நமது நிதி அமைச்சர் பட்ஜெட் உரையின் போது லட்சுமியின் ஆசியைக் கோரியது பற்றியதாகும்! இன்று கூட, ஒரு பெரிய உறுப்பினர் பேசும்போது, விலைவாசி உயர்வையோ பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தவோ தங்கள் கைகளில் மந்திரக்கோல் ஒன்றும் இல்லை என்று தெரிவித்தார். நான் பேச விளைவது மந்திரக் கோல் வைத்திருக்கிறார்களா, கடவுளின் ஆசியை கேட்பது பற்றியோ, நிலையற்ற பருவ மழையை குறை கூறுவதைப் பற்றியோ, உலக சந்தையில் நிலவும் தேக்க நிலையை சுட்டிக்காட்டுவதையோ பற்றியதல்ல. எனது கேள்வியானது, அரசாங்கத்தின் கண்ணோட்டம் பற்றியது, அது ஆம் ஆத்மி, அதாவது சாதாரண மக்களுக்காகப் பணியாற்றப் போகிறதா அல்லது அதன் நடவடிக்கைகள் கார்ப்பொரேட் துறைகள், மோசடி வர்த்தகர்கள், கள்ளச் சந்தைக்காரர்கள் மற்றும் சந்தையில் ஊகவிலையை நிர்ணயிப்பாளர்களின் நலன்களுக்காகவா என்பதே!

ஊக விலை நிர்ணயிப்பாளர்கள், கள்ளச் சந்தைக்காரர்கள், மற்றும் பதுக்கல்காரர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் அத்தியாவசியப் பொருட்கள் சட்டத்தை கடுமையாக அமல்படுத்தும்படியும் அரசாங்கத்தை நான் வலியுறுத்துகிறேன்.' (3 ஆகஸ்ட் 2011 அன்று பேசியது)

அதற்கு முன்பொரு சமயத்தில் அவர் பாராளுமன்றத்தில் பேசியதாவது; 'கோதுமை, அரிசி, சீனி கூட இந்திய உணவுக் கழகக் கிட்டங்கிகளில் கெட்டு போய்விட்டன என்பதை நாம் அவ்வப்போது கேள்விப்படுகிறோம். அதே நேரத்தில், சர்க்கரை உள்ளிட்ட பல அத்தியாவசியப் பொருட்களுக்கு நாட்டில் தட்டுப்பாடு இருப்பதாகவும் அதனால் அவை இறக்குமதி செய்யப்படுவதாகவும் கூறப்படுகிறது. நான் வசிப்பது சுதந்திர இந்தியாவிலா அல்லது பிரிட்டிஷ் இந்தியாவிலா என்று சில நேரங்களில் ஆச்சரியப்படுகிறேன்.'

### எத்தனை எம்பிக்கள் இப்படி சாதாரண மக்களுக்காக எந்தவித தயக்கமுமின்றி பாராளுமன்றத்தில் போராடுகின்றனர்?

அதுமட்டுமல்ல. குடியரசுத் தலைவர் தனது உரையில் மத்திய அரசாங்கத்தின் கொள்கைகள் மற்றும் முன்னுரிமைகள் பற்றியும், தேசத்தின் வலிமை, வளர்ச்சி, வளம் பற்றியும் புகழ்ந்து பேசினார். தோழர் மண்டல் கேட்டதாவது; 'வளர்ச்சி என்பதற்கு அர்த்தம் சில பெருங்கோடீஸ்வரர் களிடம் மேலும் மேலும் பணம் சேர்வதும் கிட்டத்தட்ட ஒட்டுமொத்த நாட்டு மக்களும் தரித்திரத்திற்கு ஆளாவதும், சந்தைப் பொருளாதாரத்தைப் பின்பற்றுவதன் மூலம் பணக்காரர்களுக்கும் ஏழைகளுக்கும் இடையிலான இடைவெளியைக் அதிகரிப்பதும் தானா? வளர்ச்சி என்பதன் அர்த்தம் நமது கோடிக் கணக்கான இளைஞர் சக்திகள் வேலையில்லாமல் இருப்பதா, பெரிய அளவிலான எண்ணிக்கையில் பெண்களும் குழந்தைகளும் பாலியல் சுற்றுலா

தொடர்ச்சி 7ம் பக்கம்

## மார்ச் 23 – பகத்சிங்கின் 83வது நினைவு தினம்





மார்ச் 23, 2014 அன்று தியாகி பகத்சிங்கின் 83வது நினைவுதினப் பொதுக்கூட்டம் சென்னை, கொருக்குப்பேட்டையில் நடைபெற்றது. நெய்வேலியிலும் மதுரையிலும் இந்நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

## தோழர் தருண் மண்டல்...

# பாராளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் நடைபெற்ற போராட்டங்களில் உத்வேகத்துடன் பங்கேற்றார்

6ம் பக்கத் தொடர்ச்சி

விற்கும் சதை வியாபாரத்திற்கும் தள்ளப்படுவதும் கிட்டத்தட்ட 25 கோடி மக்கள் தொடர்ந்து பட்டினியில் வாழ்வதும்தானா? உள்ளிணைந்த வளர்ச்சி என்பதன் அர்த்தம் விவசாயிகள் லட்சக் கணக்கில் தற்கொலை செய்வதுதானா? சுகாதாரம், கல்வி, கழிப்பறை, குடிநீர் வசதிகள் இல்லாததால் உலக மனித வளர்ச்சிக் குறியீட்டில் இந்தியா 147 நாடுகளில் 67வது இடத்தைப் பிடிப்பதுதான் உள்ளிணைந்த வளர்ச்சியின் லட்சணமா? நல்ல ஆட்சி நிர்வாகம் என்றால் அரசாங்கத்தின் கிட்டத் தட்ட அனைத்து அமைச்சர்களும் நிர்வாகத் துறை களும் பெரிய அளவிலான ஊழல், மற்றும் லஞ்ச லாவண்யத்தில் ஈடுபடுவது என்பதுதான் பொருளோ? முந்தைய அரசாங்கங்களின் செயல் பாடுகளோடு ஒப்பிடுகையில் எந்த வகையிலும் இந்த அரசாங்கத்தின் செயல்பாடுகள் நன்று என நான் கூற மாட்டேன்?', தொடர்ந்து பேசுகையில், 'ஒழுக்கநெறித்தன்மை, நேர்மை, வெளிப்படைத் தன்மை, பதிலளிக்கக்கடமை, போன்றவை எல்லாம் யுபிஏ அரசாங்கத்தின் கைகளிலும் அதே போன்று எதிர்கட்சிகள் ஆளும் மேற்குவங்கம், கேரளா, குஜராத், சத்தீஸ்கர் போன்ற மாநிலங்களிலும் பலிகடா ஆகியுள்ளன.'

### அணுசக்தி அதோடு மற்ற பிரச்சினைகளின் மீதான பிரதமரின் கருத்துக்கு எதிராக

அணு மின் உற்பத்தியால் விளையும் மோசமான விளைவுகளை உணர்ந்த தோழர் தருண் மண்டல் தமிழ்நாட்டில் கூடங்குளத்தில் அணுஉலை அமைப் பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நடைபெறும் இயக் கத்தில் பங்கேற்றார். பாராளுமன்றம் நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்தில் கன்னியாகுமரியில் நடை பெற்ற அணுசக்திக்கு எதிரான மாநாட்டில், தனது உடல்நிலை சரியில்லாத சூழலிலும்கூடக் கலந்து கொண்டு, போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தார். அணு சக்திக்கு ஆதரவாக பிரதமர் பேசியதற்கு பாராளுமன்றத்தில் தனது கடுமையான எதிர்ப்பைப் பதிவு செய்தார். வங்கமொழி–பேசும் மத சிறு பான்மையினர் அசாமில் சந்திக்கும் பிரச்சினைகள், தெலுங்கான பிரச்சினை, காஷ்மீர் பிரச்சினை, இலங்கையில் தமிழ் மக்கள் மீது தொடுக்கப்பட்ட அரசு அடக்குமுறை, லோக்பால் மசோதா போன்ற பிற பிரச்சினைகளிலும் தோழர் மண்டல் தனது கருத்துக்களைப் பதிவு செய்தார். சில நேரங்களில் தனது கருத்துக்களை சம்பந்தப்பட்ட அமைச்சர் களுக்கு கடிதம் மூலம் தெரிவித்தார்.

### மாநிலத்திற்கு வெளியேயும் வெளிநாடுகளிலும்

தான் தேர்ந்தெடுக்கப்பட்ட தொகுதிக்குள் மட்டும் அவர் பணியை நிறுத்திக்கொள்ளவில்லை, மற்ற மாநிலங்களில் ஜனநாயக வெகுஜன இயக்கங் களைக் கட்டியெழுப்புபவர்களின் அழைப்பிற்கும் செவிமடுத்தார். மத்தியப் பிரதேசத்தில் போபால் விஷவாயு கசிவால் பாதிக்கப்பட்டோருக்கு உரிய நிவாரணம் வழங்கக்கோரும் மக்கள், தமிழ்நாட்டில் கூடங்குளத்தில் அணுஉலை அமைப்பதற்கு எதிராகப் போராடும் மக்கள், ஒடிசாவில் உள்ள ஜகட்சிங்பூரில் உள்ள போஸ்கோ உருக்கு ஆலைக்காக தங்களுடைய நிலங்களையும் வீடுகளையும் விட்டு வெளியேற்றப் படும் விவசாயிகள், ஜார்கண்ட் மற்றும் புது டில்லியில் வெளியேற்றப்பட்ட குடிசைவாசிகள், அதே போன்று அசாம் மற்றும் திரிபுரா இடையே முறையான ரயில் பாதை இணைப்புக் கோரி போராடும் மக்கள் என பலரது அழைப்புகளுக்கு இணங்கி அங்கு சென்று ஆதரவு தெரிவித்தார். இந்த மக்கள் கோரிக்கைகள் அனைத்தையும் அரசாங்கத்தின் முன்பு எழுப்பவும் செய்தார்.

வங்கதேச தலைநகர் டாக்காவில் நடைபெற்ற சர்வதேச ஏகாதிபத்திய–ஏகாதிபத்திய எதிர்ப்பு மாநாட்டில் கலந்துகொண்ட இந்தியப் பிரதிநிதி களுள் ஒருவராக முக்கியப்பங்காற்றினார். தண்ணீர் பகிர்வில் சர்வதேச விதிமுறைகளைப் பின்பற்றி உரிய இழப்பீடு வழங்க வலியுறுத்தி டாக்காவில் போராடியவர்களுக்கு அவர் ஆதரவு தெரிவித்த தோடு அவர்களது நியாயமான கோரிக்கைக்கு ஆதர வாக இந்தியப் பாராளுமன்றத்திலும் பேசினார். நியூசிலாந்துடனான இருதரப்பு உறவை மேம் படுத்துவதற்காக அங்கு மாண்புமிகு மக்களவை சபாநாயகர் தலைமையில் பயணம் மேற்கொண்ட ஆறுபேர் கொண்ட எம்பிக்களில் ஒருவராக தோழர் தருண் மண்டலும் சென்றார். தோழர் தருண் மண்டல் ஒப்பீட்டளவில் இளைஞராகவும் புதியவராகவும் இருந்தபோதிலும் ஆக்கப்பூர்வமான சிறந்த பாராளு மன்றவாதியாக இருக்கிறார் என்று நியூசிலாந்து பிரதிகளிடம் சபாநாயகர் அவரைப் பாராட்டினார்.

### தோழர் தருண் மண்டலின் தனிப்பட்ட வாழ்க்கை

தோழர் தருண் மண்டல் அவர்கள் தனது குழந்தைப் பருவத்தில் கடுமையான தாங்கமுடியாத வறுமையைச் சந்தித்தார். இந்த உணர்வுதன், அவரது மாணவப் பருவத்திலேயே அவரை எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் ஸ்தாகப் பொதுச் செயலாளரும் தலைசிறந்த மார்க்சிய மேதையு மான தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்களின் புரட்சிகர சிந்தனைகளுக்கு நெருக்கமாக வரவைத்தது. மருத்துவப் படிப்பை முடித்த உடன் அவர் மத்திய அரசாங்கத்தின் உயர் பதவியில் சேர்ந்தார். தனது ஊதியத்தின் பெருந்தொகையை கட்சியின் போராட்ட நிதிக்கு நன்கொடையாக வழங்கினார். மீதியை அவரது வயதான தாயார் மற்றும் கட்சியின் முழு நேர ஊழியரான அவரது சகோதரர் அடங்கிய குடும்பத்தின் செலவுக்கு கொடுத்துவந்தார். ஆனால் சிங்கூர்–நந்திகிராமில் அமைதியாகப் போராடி யவர்கள் மீது சிபிஐ(எம்) அரசாங்கம் மிக மோசமான வன்முறைத் தாக்குதலைத் தொடுத்து, ஆயுதம் தாங்கிய கிரிமினல்களை வைத்து காட்டுமிராண்டித் தனமான கொலைவெறித் தாக்குதல்கள் தொடுத்து, பெரிய அளவில் கூட்டுக் கற்பழிப்புகளையும் செய்து நியாயமான ஜனநாயக இயக்கத்தை நசுக்க முயற்சித்த போது, தோழர் தருண் மண்டல் அவர்களால் வேடிக்கை பார்த்துக்கொண்டு சும்மா இருக்க முடிய வில்லை. காவல்துறை துப்பாக்கி சூட்டையும் பொருட் படுத்தாமல், குண்டடி மற்றும் கூட்டுக்கற்பழிப் பால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மருத்துவ உதவி வழங்குவதற்காக மெடிக்கல் சர்வீஸ் சென்டர் தன்னார்வத் தொண்டர்களுடன் நந்திகிராம் விரைந்தார். நந்திகிராமிற்கு முதலில் சென்ற மருத்துவக்குழுவும் அதுவே. அதன் பின்னர் தனது வேலையை ராஜினாமா செய்த அவர் வர்க்க மற்றும் வெகுஜன போராட்ட இயக்கங்களை வளர்த்தெடுப் பதற்காக கட்சியின் முழுநேர ஊழியரானார். பாராளுமன்ற உறுப்பினரான அவர் பெற்ற ஊதியம், அனைத்தையும் கட்சியின் போராட்ட நிதிக்கே வழங்கினார். இதுதான் அவரது வாழ்க்கை. புரட்சியை, புரட்சிகர இயக்கத்தை, புரட்சிகர கட்சியை வெகுஜன இயக்கத்தை வலுப்படுத்துவதே அவரது நோக்கம், அதுவன்றி தோழர் தருண் மண்டல் அவர் களுக்கு வாழ்க்கையில் வேறு லட்சியம் ஏதும் இல்லை. அவரும் அவரது மனைவியும் கட்சியின் முழு நேர ஊழியர்களாக கட்சியின் மையத்தில் இருந்துகொண்டு பணியாற்றுகின்றனர்.

### ஒடுக்கப்பட்டவர்கள் மற்றும் ஜனநாயக இயக்கத்தின் குரலை பாராளுமன்றத்தில் தோழர் தருண் மண்டல் உயர்த்திப்பிடித்தார்

தேர்தல்கள் மூலமோ அல்லது அரசாங்கங்களை மாற்றுவதன் மூலமோ விடுதலையைக் கொண்டு வரமுடியாது என்று எஸ்யுசிஐ(கம்யூனிஸ்ட்), மார்க்சிசம்–லெனினிசம்–தோழர் சிப்தாஸ் கோஷ் சிந்தனைகளால் வழிநடத்தப்படும், பாட்டாளி வர்க் கத்தின் புரட்சிகரக் கட்சி நம்புகிறது. முதலாளித்துவ–எதிர்ப்பு சோசலிசப் புரட்சியின்மூலம் முதலாளித் துவ அரசைத் தகர்த்தெறிவதன் மூலம் மட்டுமே விடுதலை கிடைக்கும். புரட்சியின் அவசியத்தை உணராதவரை பொதுமக்கள் தொடர்ந்து பூர்ஷ்வா பாராளுமன்ற தேர்தல் வட்டத்திற்குள்தான் இருப்பர். எனவே பாராளுமன்ற மாயையை மக்கள் மனதில் இருந்து அகற்றவேண்டும், ஒருவேளை தேர்ந் தெடுக்கப்பட்டால், பாராளுமன்றத்திற்கு–வெளியே போராட்டங்களை வலுப்படுத்திக்கொண்டே, பாராளு மன்றத்திற்கு உள்ளேயும் பெருவாரியான ஒடுக்கப் பட்ட உழைக்கும் மக்களின் எதிர்ப்புக் குரலைப் எதிரொலிக்க வேண்டும் என்ற தெளிவான நோக்கத் தோடுதான் எஸ்யுசிஐ(கம்யூனிஸ்ட்) தேர்தல்களில் பங்கேற்கிறது.

தோழர் சிப்தாஸ் கோஷ் போதனைகளால் வழிநடத்தப்படுகின்ற தோழர் தருண் மண்டல் இந்தக் கடமையை மிகச் சிறப்பாக செய்துள்ளார் என்பதைப் பெருமையாகக் கூறிக்கொள்ளலாம். இன்று தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளின் கலாச்சார சீரழிவைக் கண்டு நாட்டு மக்கள் அச்ச மடைந்துள்ளனர். இதனால் யாருமில்லையே என்ற விரக்தியும் அடைந்துள்ளனர். எம்பிக்கள் மற்றும் எம்எல்ஏக்களின் தரம் வேகமாகச் சீரழிந்துவரும் நேரத்தில் புரட்சிகரக் கட்சியின் வழிகாட்டுதலின் கீழ் தோழர் தருண் மண்டல் ஒளிர்விடும் உதாரண மாக விளங்கியுள்ளார். அவரைச் சந்தித்த அனை வரையும் அவரது ஓய்வறியா குணத்தால், அமைதி யான மென்மை, அடக்கமான நடத்தை மற்றும் உயர்ந்த ஒழுக்கநெறியால் கவர்ந்து இழுத்துள்ளார்.

எனவே கட்சி மற்றும் கருத்து பாகுபாடின்றி ஏராளமானோர் முன்வந்து அவரை மீண்டும் தேர்ந் தெடுப்பதற்கு அனைத்து முயற்சிகளையும் மேற் கொண்டுள்ளனர். இந்த ஆழமான, பரந்துபட்ட, உணர்ச்சிமிகு ஆதரவை ஆதாரமாகக் கொண்டு தோழர் தருண்மண்டல் தேர்தல் களத்தில் உள்ளார். மறுபுறம் காங்கிரஸ்–திரிணாமுல் காங்கிரஸ்–சிபிஐ(எம்) மற்றும் பிஜேபி போன்ற கட்சிகள்

தொடர்ச்சி 8ம் பக்கம்

## ஏப்ரல் 24 – எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் 66வது ஸ்தாபக தினம்




ஏப்ரல் 24, 2014 அன்று எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் 66வது ஸ்தாபக தினம் தேனியில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் A ரெங்கசாமி எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) தமிழ்நாடு மாநிலச் செயலாளர் உரையாற்றுகிறார். இந்நிகழ்ச்சி சென்னையிலும் நடைபெற்றது.

Registered Newspaper
Posted at : Chennai Egmore Rms/1Patrika Channel
Posted on :
Publication 26th May 2014

பாட்டாளி சிந்தனை

Post.Reg.No:TN/CCN/429/2012-14
WPP Licence No:TNCCN/153/2012-14
Registered with the Registrar of Newspapers for India No : 62018/88

# மார்ச் 8 – சர்வதேச மகளிர் தினம்





மார்ச் 5, சர்வதேச மகளிர்தினம் மதுரையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஏஐஎம்எஸ்எஸ்யின் அகில இந்திய துணைத்தலைவர் ஷைலா கே ஜான் உரையாற்றினார், இந்நிகழ்ச்சி தேனியிலும் மார்ச் 7ம் தேதி நடைபெற்றது.





மார்ச் 8, சர்வதேச மகளிர் தினம் நெய்வேலியில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தோழர் சுமதி ஏஐஎம்எஸ்எஸ்யின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் உரையாற்றினார். இந்நிகழ்ச்சி சென்னையிலும் மார்ச் 9ம் தேதி நடைபெற்றது.

## தோழர் தருண் மண்டல்...

# மக்கள் பிரதிநிதிகள் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு முன்னுதாரணமாக திகழ்ந்தார்

7ம் பக்கத் தொடர்ச்சி

பணம்–ஆள்பலம்–கிரிமினல்–ஊடகம்–நிர்வாக அதிகாரத்தை மட்டுமே நம்பிக் களத்தில் உள்ளனர்.

தோழர் தருண் மண்டல் பிரதிநிதித்துவப் படுத்தும் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) இயங்குவது பெரிய தொழிலதிபர்கள்–ப்ரொமோட்டர்ஸ்–ஒப்பந்தகாரர்கள்–மற்றும் கள்ளச்சந்தைக்காரர் களின் நிதி உதவியை நாடியல்ல. அது மக்கள் நிதியில், மக்களது நன்கொடையில், மக்களின் தாராள மான பங்களிப்பில் இயங்குகிறது. இந்தக் கட்சி வீதிகளிலும் மக்களின் கதவுகளைத் தட்டியும் நிதி வசூல் செய்கிறது. அப்படி சேகரித்த போராட்ட நிதி யிலிருந்துதான் இக்கட்சி தேர்தலைச் சந்திக்கிறது. அது பணத்தாசை காட்டி இளைஞர்களை மோசடி யாக அறநெறி பிறழ்ந்து அழைப்பதில்லை. மக்களுக்கு இது நன்றாகத் தெரியும்.

இந்திய அரசியலின் இந்த இருண்ட நாட்களில், முதலாளித்துவத்தின் இந்த அழுகிய கால கட்டத்தில், தோழர் தருண் மண்டல், மார்க்சிசம்–லெனினிசம்–சிப்தாஸ் கோஷின் சிந்தனையால் வழிநடத்தப்படும் புரட்சிகர பாட்டாளி வர்க்க இயக்கத்தின் ஒரு பிரதிநிதியாகவும் ஒரு எம்பி யாகவும் உயர்ந்த கலாச்சாரத்தை பிரதிபலித்துள்ள தோடு இருண்ட சூழலில் ஒளிர்விடும் கீற்றாய் மிளிர்கிறார்.

# வரலாற்று சிறப்புமிக்க 128வது மே தினம்

128வது மே தினத்தை அனுஷ்டிக்கும் முகமாக ஆல் இண்டியா யுனைடெட் டிரேட் யூனியன் சென்டர் (ஏஐயுடியுசி – AIUTUC) சென்னை மாவட்ட அமைப்புக் கமிட்டியின் சார்பில் சென்னை ஓட்டேரி எம் எம் அரங்கத்தில் பொதுக்கூட்டம் மே 01, 2014 அன்று நடந்தது. வியாசர்பாடி, கொருக்குப்பேட்டை, ஓட்டேரி பகுதிகளிலிருந்து தொழிலாளர்களும், இளைஞர் களும் திரளாக இக்கூட்டத்தில் கலந்து கொண் டனர். இந்தப் பொதுக்கூட்டத்திற்கு ஏஐயுடியுசி யின் சென்னை மாவட்ட அமைப்புக் கமிட்டியின் உறுப்பினர் தோழர் மோகன்ராஜ் தலைமை யேற்றார் கூட்ட நிகழ்வின் துவக்கமாக மே தினத் தியாகிகளின் ஸ்தூபிக்கு எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் மாநில அமைப்புக் கமிட்டியின் செயலாளர் தோழர் A ரெங்கசாமி அவர்கள் மாலையணிவித்து மரியாதை செலுத்தினார். மே நாளன்று காலை சென்னை–சென்ரல் இரயில் நிலையத்தில் நிகழ்த்தப்பட்ட குண்டு வெடிப்பு சம்பவத்திற்கு கண்டனத் தீர்மானத்தை ஏஐயுடியுசியின் சென்னை மாவட்ட அமைப்புக் கமிட்டியின் உறுப்பினர் தோழர் கோவிந்தராஜ் முன்மொழிய தீர்மானம் அவையினரால் ஒரு மனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.





மே 1, 2014 அன்று 128வது மே தினப் பொதுக்கூட்டம் சென்னை, ஓட்டேரியில் நடைபெற்றது. தோழர் சடையாண்டி ஏஐயுடியுசி சென்னை மாவட்ட அமைப்புக்கமிட்டி உறுப்பினர் உரையாற்றுகிறார்.

# சென்னை–சென்ட்ரல் ரயில் நிலையத்தில் குண்டு வெடித்ததைக் கண்டித்து எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) அறிக்கை

மே 1, 2014 அன்று அதிகாலை பெங்களூர் – குவஹாட்டி எக்ஸ்பிரஸின் இரண்டு பெட்டி களில் வெடித்த இரண்டு குண்டுவெடிப்பு குறித்து எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் தமிழ்நாடு மாநில அமைப்புக்கமிட்டி செயலாளர் தோழர் A ரெங்கசாமி வெளியிட்டுள்ள அறிக்கை:

அப்பாவி பயணிகளின் மீது இழைக்கப்பட்ட இந்த கொடூரமான இருதயமற்ற வன்முறைச் செயலை எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) வன்மையாக கண்டிக்கிறது. குற்றவாளிகள் உடனடியாக கண்டுபிடிக்கப்பட்டு உரிய தண்டனை வழங்கவும் கோருகிறது.

சரியாக சிந்திக்கும், ஜனநாயக எண்ணங் கொண்ட எவராலும் இந்த குண்டுவெடிப்பு கலாச்சாரத்தை ஏற்றுக்கொள்ள முடியாது. உண்மையில், இது போன்ற செயல்கள் அனைத்து வடிவங்களிலுமான நியாயமான ஜனநாயக எதிர்ப்பிற்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்துகிறது. மத்திய, மாநில அரசாங்கங்களின் மக்கள் விரோத கொள்கைகளின் காரணமாக பெரும்பான்மை மக்களின் வாழ்க்கை நிலை மேலும் மேலும் துயரத் திற்குள்ளாகிவரும்போது அவர்கள் பல்வேறு பிரச்சினைகளை முன்வைத்து எல்லாவிடங் களிலும் எதிர்ப்பு இயக்கங்களில் பங்கெடுத்து வருகின்றனர். குண்டுவெடிப்புகள் மற்றும் இதுபோன்ற சம்பவங்களை காரணமாக வைத்து பல்வேறு பிரிவு மக்களின் நியாயமான போராடும் உரிமையை பறிக்கும் கொடூரமான சட்டங்கள் இயற்றப்படுவதன்மூலம் ஆளும் வர்க்கத்தின் கரங்கள் வலுப்படுகின்றது. மக்களின் எதிர்ப்பு களை முறியடிக்கும் இதுபோன்ற சதிகள் குறித்து மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும்.

முன்பதிவு செய்யப்பட்ட தூங்கும் வசதி கொண்ட பெட்டிகளில்கூட முன்பதிவு செய் யாதவர்களை 'தண்டனை அளித்து (With fine) பயணம் செய்யும் வகையில்' ஏற்றிக்கொண்டு கூட்டம் அதிகரித்து பயணிகள் பெரும் சிரமத்திற்கு உள்ளாகி வருகின்றனர். இதனை ரயில்வே நிர்வாகம் தனது முழு அனுமதியுடன் வருமானத்திற்கான நல்ல வழியாக கருதுவதாக மக்கள் நினைக் கின்றனர். பயணிகள் மீது பாதுகாப்பு சர்சார்ஜ் விதிக்கப்படுவதை இத்தகைய செயல்கள் கேலிக் கூத்தாக்குகிறது. எப்படியேனும் வருமானத்தை பெருக்கிக்கொள்வது தவிர பயணிகளின் பாதுகாப்பு குறித்து ரயில்வே நிர்வாகத்திற்கு கிஞ்சித்தும் அக்கறை இல்லையோ எனும் கேள்வியை இது எழுப்புகிறது. இதுபோன்ற குண்டுவெடிப்பு சம்பவங்களுக்கு வெறும் பெயரளவிற்கு நடவடிக்கை எடுப்பதைத் தவிர பயணிகளின் தனிப்பாதுகாப்பு, ரயில் பாதுகாப்பை உத்திரவாதப்படுத்தும் எவ்வித உருப்படியான நடவடிக்கைகளும் எடுக்கப்படுவதில்லை.

இக்குண்டுவெடிப்பில் பலியான 22 வயது ஸ்வாதியின் குடும்பத்தினருக்கும் படுகாயமுற்றவர் களுக்கும் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சி தனது இதயபூர்வமான ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரி வித்துக்கொள்கிறது. படுகாயமுற்ற அனைவரும் விரைவில் முழு நலன் பெறவும் வாழ்த்துகிறது.

ரயில்வே அமைச்சகத்தால் அறிவிக்கப்பட்ட இழப்பீட்டுக் தொகையானது தற்போதைய நிலவரத்துடன் ஒப்பிடும்போது வெகுதூரத்தில் இருக்கிறது எனவும் குறிப்பாக இறந்தவர்களுக் களான தொகை அதிகரிக்கப்பட வேண்டும் எனவும் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கருதுகிறது. மேலும், காயமுற்றவர்கள் முழுமையாக குணமாகும் வரை அதற்கான முழு மருத்துவ செலவை ரயில்வே அமைச்சகமும் அரசாங்கமும் ஏற்றுக்கொள்ள வேண்டுமெனவும் நாங்கள் கோருகிறோம்.

சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா, தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டிக்காக, அச்சிட்டு - வெளியிடுபவர்: வி.பி.நந்தகுமார். அலுவலகம் : பு.எண். 16 (ப.எண். 18), இராட்லர் தெரு சூளை, சென்னை 600 112, அச்சகம் : அய்யனார் ஆப்செட், நெ.10, சுப்பராவ் நகர், சூளைமேடு, சென்னை 600 094. ஆசிரியர் : வி.பி.நந்தகுமார்

Published by: V P Nandakumar on behalf of Socialist Unity Centre of India, Tamilnadu State Organising Committee, from New No16 (Old No18), Rotler Street, Choolai, Chennai 600 112 and Printed at Aiyanar Offset, No.10, Subha Rao Nagar, Choolaimedu, Chennai 600 094. Editor : V P Nandakumar
Tel : 044 - 2643 3169, 94445 51930 Email : suci_tn@yahoo.com Please visit our Website : www.suci-c.in